உ

சிவமயம்.

நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்கம், பர்மா.

முப்பதாம் ஆண்டு

அறிக்கை.

1952-53.

74, மோகல் வீதி, இரங்கூன்

அட்டவணை

	பக்கம்
உத்தியோகஸ்தர்களும் நிர்வாகிகளும்	3
காரியசபை அங்கத்தினர்கள்	5
பஞ்சாயத்து சபை அங்கத்தினர்கள்	5
முகவுரை	6
மசோதாக்களும் சட்டங்களும்	
லீவு. விடுமுறை தினங்கள் சட்டம், 1951	6
ஸ்தாவர சொத்து மாற்று (கட்டுப்பாட்டு) (திருத்த)ச் சட்டம், 1952	7
பர்மா இன்கம்டாக்ஸ் (இரண்டாவது திருத்த)ச் சட்டம், 1952	8
இந்தியா பர்மா இன்கம் டாக்ஸ் நிவாரண உத்தரவு (ரத்து)ச் சட்டம், 1952	8
பர்மா விவசாயிகள் கடன் நிவாரண (திருத்த)ச் சட்டம், 1952	8
பர்மா விவசாயிகள் கடன் நிவாரண விதிகள்	8
விற்பனை வரிச் சட்டம், 1952	14
குடியாண்மை விநியோகச் சட்டம், 1953	15
குடியாண்மை விநியோக விதிகள், 1953	15
விவசாய பேங்குகள் சட்டம், 1953	16
தொழில் இடங்கள் வரிச் சட்டம், 1949	16
ஷாப்புகள், ஸ்தாபனங்கள் சட்டம், 1951	17
பர்மா யூனியன் பேங்கு சட்டம், 1952	17
சில முக்கிய தீர்ப்புகள்	
காலாவதி நிர்ணயம் பற்றி	17
லேவாதேவிச் சட்டப்படி வட்டி வாங்கக்கூடிய அளவு	17
நிலப் பிரச்னைகள்	
நிலங்களைத் தேசியமாக்குதல்	18
நிலம் நஷ்ட ஈட்டுக் கமிஷன்	20
நில விற்பனை	22
நிலச் சேவா	23
வரிப்பாக்கி நடவடிக்கைகள்	24
நில வரி	24
குடியாண்மை விநியோகச் சட்டம், 1948-ஸ்டாண்டர்டு சேவாச் சட்டம் 1950 இவைகளின் பேரில் கோர்ட்டுகளில் நடவடிக்கைகள்	26
மற்ற ஸ்தாபனங்கள்	
நம் சங்க இந்திய ஆலோசனைக் கமிட்டி	26
நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் தர்ம ஸ்தாபன சங்கம்	27
சகோதர சங்கங்கள்	
அகில உலக வர்த்தக சங்கம், பாரீஸ்	29
அகில இந்திய வியாபார சங்கங்களின் சம்மேளனம், புதுடில்லி	29
அகில பர்மா இந்தியன் காங்கிரஸ்	29
இந்தியன் எஜுகேஷன் சொஸைட்டி	30
அகில பர்மா தமிழர் சங்கம்	30
பாரத் சேம்பர் ஆப் காமர்ஸ்	31

பர்மா நிலச்சுவாந்தார்கள் சங்கம் 31
அகில பர்மா ஹிந்து சென்ட்ரல் போர்டு 31
இதர சங்கங்கள் 32

தபால், தந்தி, போக்குவரத்து சாதனங்கள்

தபால் கட்டணங்கள் 32
தந்திகள் 32
மணியாடர்கள் 33
தபாலாபீசுகள் 33
போக்குவரத்து சாதனங்கள் 33
கப்பல் பிரயாண கட்டண உயர்வு 33

இதர விஷயங்கள்

பாங்குகள் மூலம் பணம் அனுப்புதல் 34
பர்மாவிலிருந்து இந்தியா செல்லும் பிரயாணிகள்
கொண்டுபோகக்கூடிய தொகை 34
இமிக்ரேஷன் பாஸ்போர்ட்டு விபரங்கள் 34
அன்னியர் ரிஜிஸ்ட்ரேஷன் 35
இன்கம்டாக்ஸ் க்ளியரன்ஸ் சர்ட்டிபிகேட்டுகள் 35
அகில பர்மா விவசாயிகள் மகாநாடு, மாந்தளை 36
சீனா, ருஷ்யா போய்வந்த நிலம் தேசியமாக்கும் பார்வை தூதுகோஷ்டி 38
துவேஷப் பிரசாரம் 38
நெருப்பு விபத்துகள் 38
மோல்மேன் ருூன் அளகப்பன் அம்பலம்பேரில் கம்பிளேண்டு 39
மாந்தளை நகரத்தார்கள் கோவில் இட க்ராண்டு புதுப்பிக்கும் முயற்சி 39

உபசாரங்கள்

வழியனுப்பு 39
வரவேற்பு 40
ஆசிய சோஷலிஸ்டு மகாநாட்டு தென்னிந்திய பிரதிநிதிகளுக்கு உபசாரம் 40
முக்கிய தீர்மானங்கள் 40

நன்கொடைகள்

இந்திய ராணுவ கொடி தின வசூல் 41
சென்னை மாகாண புயல் நிவாரண நிதி 41
ப. ஸ ப. ல. குவேத்திட் நெருப்பு நிவாரண நிதி 42
இரங்கூன் சர்வகலாசாலையில் நம் சமூகத்தினரின் நிதி 42

நமது சங்கம்

சங்கத்து கப்பல் டிபார்ட்மெண்டு 45
சங்கத்தின் சந்தா வசூல் 45
விசேஷ நிதி வசூல் 45
கூட்டங்கள் 46
வாசகசாலை 46
கணக்குகள் 46
சிப்பந்திகள் 47
சிக்கனம் 47
முடிவுரை 47
நந்தன வருஷம் ஆவணி மாதம் முதல் தேதிமுதல்
விஜய வருஷம் ஆடி மாதம் 32உ வரை வரவு செலவு கணக்கு 48
விஜய வருஷம், ஆவணி மாதம் 1உயில் அயன் தொகை 49

உ

சிவமயம்

நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்கம், பர்மா.

விஜய வருஷம் ஆடி மாதம் 32உ (16-8-53) முடியவுள்ள 30-வது ஆண்டின்

நிர்வாக சபை அறிக்கை.

உத்தியோகஸ்தர்களும் நிர்வாகிகளும்.

நந்தன வருஷம் ஆவணி மாதம் 16உ (31-8-52) ஞாயிற்றுக்கிழமை நடந்த இருபத்தி ஒன்பதாவது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப் பெற்ற உத்தியோகஸ்தர்களையும் நிர்வாகசபை அங்கத்தினர்களையும், பின்னால் ஏற்பட்ட மாறுதல்களுடன் கீழே தருகிறோம்:—

திருவாளர்களான:—

தலைவர்

1.	சுப. க. அ. ராம. சொக்கலிங்கம் செட்டியார்	இரங்கூன்.
	சொ. மு. அ. மெ. ராம. ஷண்முகஞ் செட்டியார்	,,

உப-தலைவர்

2.	சித. நாரா. நாராயணன் செட்டியார்	தந்தலம்

கௌரவ காரியதரிசி

3.	நா. லெ. இராமநாதன் செட்டியார்	இரங்கூன்
	பெரி. அள. மு. நடராஜன் செட்டியார்	உவாக்கமா.

கௌரவ உப-காரியதரிசி

4.	சா. அ. அ. கருப்பஞ் செட்டியார்	இரங்கூன்.

நிர்வாகசபை அங்கத்தினர்கள்

திருவாளர்களான:—

5.	நா. கரு. ராம. பழனியப்ப செட்டியார்	இரங்கூன்.
6.	பெரி. சுப. சுப்பிரமணியன் செட்டியார்	,,
7.	சா. ராம. மு. சித. மு. நாகப்பப்ப செட்டியார்	,,
8.	வயி. ராம. அரு. சாத்தப்ப செட்டியார்	,,
9.	அ. க. ராம. மெ. கி. அழகப்ப செட்டியார்	,,
10.	மு. அள. ஆரி. அள. அளகப்ப செட்டியார்	,,
11.	அழ. வீர. வெ. பெ. அருணாசலம் செட்டியார்	,,
12.	அ. பெரி. பெரியகருப்பன் செட்டியார்	,,
13.	பி. நா. சிவ. லெ. லெட்சுமணஞ் செட்டியார்	,,
14.	கூ. அரு. க. அரு. க. லெட்சுமணன் செட்டியார்	,,
15.	வெ. வெ. கரு. வே சா. சொக்கலிங்கஞ் செட்டியார்	,,
16.	சி. கரு. சி. கரு. சிந. ராமநாதன் செட்டியார்	,,
17.	மு. வ. மு. முத்துசுப்பையா செட்டியார்	,,
18.	முரு. ராம. முரு. கண்ணப்ப செட்டியார்	,,
19.	கண. மெ. நா சொக்கலிங்கம் செட்டியார்	,,
20.	சேவு. சித. சேவுகஞ் செட்டியார்	,,
21.	பேங்க் ஆப் செட்டிநாடு ராம. பெரியகருப்பஞ் செட்டியார்	,,
22.	முருகப்பா அண் சன்ஸ் வீர. ராமன் செட்டியார்	,,
23.	ராம. பெ. நா. நடராஜன் செட்டியார்	,,
24.	சா. ராம. அரு ராம. பழநியப்ப செட்டியார்	,,
25.	சுப. க. அ. ராம அண்ணாமலை செட்டியார்	,,
26.	பேங்க் ஆப் செட்டிநாடு பழ. ராமசாமி செட்டியார்	ஹூப்பின்.
27.	பழ. ம. கரு. முத்தய்யா செட்டியார்	உவாக்கமா.
28.	அ. க. அ. சித. வெ. கருப்பஞ் செட்டியார்	,,
29.	ராம. சா. ராம. லெட்சுமணன் செட்டியார்	,,
30.	பேங்க் ஆப் செட்டிநாடு அரு. அழகப்ப செட்டியார்	பாசியன்.
31.	க. வீ. அள. மு. சுப்பிரமணியன் செட்டியார்	,,
32.	ராம. குமு. சு. கருப்பஞ் செட்டியார்	,,
33.	வெ. மு. சி. பெ. சித. ஏகப்ப செட்டியார்	,,
34.	பேங்க் ஆப் செட்டிநாடு நா. நா. ராம. சுப்பிரமணியன் செட்டியார்	மோல்மேன்.
35.	அ. மு. மு. ராம. மெய்யப்ப செட்டியார்	,,
36	முத்து. அரு. அருணாசலம் செட்டியார்	,,
37.	முத்து. கரு. அரு. கரு. அருணாசலம் செட்டியார்	சைக்கோ.
38.	கண. ராம. ராம. சொக்கலிங்கம் செட்டியார்	சயிலா.
39.	கி. அ. சு. செ. வைரவஞ் செட்டியார்	,,
40.	பேங்க் ஆப் செட்டிநாடு அழ. மு. அருணாசலஞ் செட்டியார்	அவுப்போ.
41.	கூ. கரு. நா. நாராயணன் செட்டியார்	பக்கோ.
42.	சா. ராம. அரு. ராம. சொக்கலிங்கம் செட்டியார்	பேரியா.
43.	ஆவி. பழ. நா. அழகப்ப செட்டியார்	தோங்குவா.

44. சி. கரு. சி. கரு. கண்ணப்ப செட்டியார் மோல்மேன்சூன்.
45. சுப. கயி. கயிலாசஞ் செட்டியார் ,,
46. சி. பழ. வெ. பழனியப்ப செட்டியார் பவுண்டை.
47. கரு. வெ. வெ. சே. வெங்கிடாசலம் செட்டியார் டாங்கோ.

காரியசபை அங்கத்தினர்கள்.

திருவாளர்களான:—

1. { சுப. க. அ. ராம. சொக்கலிங்கம் செட்டியார் / சொ. மு. அ. மெ. ராம. ஷண்முகஞ் செட்டியார் } தலைவர் இரங்கூன்
2. சித. நாரா. நாராயணன் செட்டியார் உப-தலைவர் தத்துவம்
3. { நா. லெ. ராமநாதன் செட்டியார் / பெரி அள. மு. நடராஜன் செட்டியார் } கௌரவகாரியதரிசி இரங்கூன் / உவர்க்கமா
4. சா. அ. அ. கருப்பஞ்செட்டியார் கௌரவ உப-காரியதரிசி இரங்கூன்
5. பேங்க் ஆப் செட்டிநாடு ராம பெரியகருப்பஞ் செட்டியார் ,,
6. சா. ராம. மு. சித. மு. நாகப்பச் செட்டியார் ,,
7. முருகப்பா அண் சன்ஸ் வீர. ராமன்செட்டியார் ,,
8. பேங்க் ஆப் செட்டிநாடு பழ. ராமசாமி செட்டியார் மூப்பின்
9. க. வீ. அள. மு. சுப்பிரமணியன் செட்டியார் பாசியன்.
10. பேங்க் ஆப் செட்டிநாடு அழ. மு. அருணாசலம் செட்டியார் அவுப்போ.

பஞ்சாயத்துசபை அங்கத்தினர்கள்.

திருவாளர்களான:—

1. சுப. க. அ. ராம. சொக்கலிங்கம் செட்டியார் இரங்கூன்
2. சித. நாரா. நாராயணன் செட்டியார் தத்துவம்
3. நா. லெ. ராமநாதன் செட்டியார் இரங்கூன்
4. சா. அ. அ. கருப்பஞ் செட்டியார் ,,
5. சு. கரு. நா. நாராயணன் செட்டியார் ,,
6. சா. ராம. அரு. ராம. பழனியப்ப செட்டியார் ,,
7. பேங்க் ஆப் செட்டிநாடு ராம. பெரியகருப்பஞ் செட்டியார் ,,
8. சா. ராம. மு. சித. மு. நாகப்பச் செட்டியார் ,,
9. முருகப்பா அண் சன்ஸ் வீர. ராமன் செட்டியார் ,,
10. அள. வீர. வெ. பெ. அருணாசலம் செட்டியார்
11. பெரி. சுப. சுப்பிரமணியன் செட்டியார் ,,
12. சொ. மு. அ. மெ. ராம. ஷண்முகஞ் செட்டியார் ,,
13. மு. அள. ஆரி. அள. அளகப்ப செட்டியார் ,,
14. ராம. பெ. நா. நடராஜன் செட்டியார் ,,
15. குப. அ. நா. கதி. கதிரேசன் செட்டியார் ,,

முகவுரை.

நமது சங்கம் இவ்வருஷத்துடன் தனது முப்பதாவது ஆண்டைப் பூர்த்திசெய்கின்றது. வழக்கம்போல் நம்மவர்கள் சம்பந்தப்பட்ட காரியங்களை, சங்கம் கவனித்து வேண்டியன செய்துவந்திருக்கின்றது. பர்மாவிலுள்ள நிலச்சுவாந்தார்கள் வகுப்பின் க்ஷேமத்தைப் பாதிக்கும் வகையில் பல காரியங்கள் நடந்திருக்கின்றன. பர்மா சுதந்திரம் அடைந்ததிலிருந்து பர்மிய சர்க்கார் தங்கள் சமஉரிமைக் கொள்கைக்கிணங்க சொத்துரிமையாளர்களுக்குக்கு, குறிப்பாக நிலச்சுவாந்தார்களுக்குப் பாதகமாகப் பல சட்டங்கள் இயற்றியிருக்கிறார்கள். பர்மாவில் அன்னியர்களுக்குப் பாதகமாக பல பிரச்னைகள் இருந்துவருகின்றன. இப்பிரச்னைகளால் நம்மவர்களுக்கும் சிரமங்கள் பல உள்ளன. எனினும் அதிகரித்திருக்கும் இத்தகைய வேலைகளை நம் சங்கம் ஏற்றுத் தனது பொறுப்பை நிர்வகித்துவந்திருக்கின்றது. புதிய ஆண்டிலும் அங்கத்தினர்கள் தங்களது சிறந்த கவனத்தையும் சீரிய ஆதரவையும் உகந்த பொருளுதவியையும் நல்கி, பெருகிவரும் வேலைகளைத் திறமையுடன் செய்துவர ஊக்கம் அளிப்பார்களென நம்புகிறோம். அங்கத்தினர்கள் ஒத்துழைப்பால் சங்கம் தன் கடமையை என்றும் செவ்வனே செய்துவரும் என்பதில் ஐயமில்லை.

மசோதாக்களும் சட்டங்களும்.

லீவு, விடுமுறை தினங்கள் சட்டம்:— (1951-ம் வருஷத்திய 58-வது சட்டம்) இச்சட்டத்தின்படி வேலைக்கு வைத்துக்கொள்பவரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் (தாய், தகப்பன், புருஷன், மனைவி, மக்கள், சகோதர சகோதரிகள்), பங்குதார்கள், வீட்டுவேலைக்காரர்கள், இவர்களல்லாத மற்ற வேலைக்காரர்களுக்கு வாராந்தர விடுமுறை நாளுடன் வருஷந்தோறும் கீழ்க்கண்ட பொது விடுமுறை தினங்கள் அனுமதிக்கப்பெறவேண்டும்.

சுதந்திர தினம்	1 நாள்.	எதிர்ப்பு தினம்	1 நாள்.
தப்பாம்மாத பௌர்ணமி	1 நாள்.	புத்தமத உபவாச ஆரம்பம்	1 நாள்.
தீஞ்சான் பண்டிகை	3 நாள்.	தியாகிகள் தினம்	1 நாள்.
பர்மிய வருஷப் பிறப்பு	1 நாள்	புத்தமத உபவாச முடிவு	1 நாள்.
மே தினம்	1 நாள்.	தாசாமோமாதபௌர்ணமி	1 நாள்.
கசோம்மாத பௌர்ணமி	1 நாள்.	தேசீய தினம்.	1 நாள்.

விடுமுறை தினங்களில் வேலை செய்யும்படி நேரிட்டால் நிர்ணய சம்பளத்தின் இரட்டிப்பும் மேலும் பஞ்சப்படிகள் ஏதேனும் இருந்தால் அதுவும் கொடுக்கப்படவேண்டும். விடுமுறை தினங்களுடன் ஒவ்வொரு வேலைக்காரருக்கும் முழுச்சம்பளத்துடன் கீழ்க்கண்ட மூன்றுவித லீவு தினங்களுமுண்டு. முதலாவதாக ஒருவருடம், சட்டத்தில் அனுமதிக்கப்பெற்ற லீவுகள், விடுமுறைகளுடன் தொடர்ச்சியாக வேலை செய்தவர்களுக்கு மறுவருஷத்தில் பதினைந்து வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பத்து நாளும்

15 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களுக்குப் பதினன்கு நாளும் சம்பாதிக்கப் பெற்ற லீவு உண்டு. சம்பாதிக்கப் பெற்ற லீவை வருடந்தோறும் உபயோகப்படுத்திக்கொள்ளாவிட்டாலும், மூன்று வருடத்திற்கு மேற்போகாத காலத்திற்குள் சேர்த்து எடுத்துக்கொள்ளலாம். லீவு காலத்திற்குள்ள பஞ்சப்படி உள்பட்ட மொத்த சம்பளம் லீவு ஆரம்ப காலத்தில் கொடுக்கப்பெறவேண்டும். சம்பாதிக்கப்பெற்ற லீவு உள்ள நபர் இராஜிநாமாச் செய்தாலும் விலக்கப்பெற்றாலும் அல்லது தவறிவிட்டாலும் அவருடைய ஷை லீவு காலத்திற்குள்ள மொத்தச் சம்பளம் பட்டுவாடாச் செய்யப்பெறவேண்டும். இரண்டாவதாக ஒருவருடத்திற்கு ஆறு தினங்களுக்கு மேற்போகாமல் சந்தர்ப்ப லீவு உண்டு. ஒரே தடவையில் மூன்று தினங்களுக்கு மேற்போகாமல் அதை உபயோகப்படுத்திக் கொள்ளலாம். அந்தந்த வருடங்களில் ஷை லீவை உபயோகப்படுத்திக் கொள்ளாவிட்டால் அது ரத்தாகி விடும். மூன்ருவதாக வருடத்திற்கு முப்பது நாட்களுக்கு மேற்போகாமல் உடம்பு அசௌகரிய லீவு உண்டு. ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட சர்வீஸ் உள்ளவர்கள் சர்க்காரால் அனுமதிக்கப் பெற்ற டாக்டர் ஒருவரிடம் சர்டிபிகேட் வாங்கித் தாக்கல் செய்தால் அந்த லீவை உபயோகப்படுத்திக் கொள்ளலாம் ஆறுமாத சர்வீஸ் இல்லாதவர்களுக்கு சம்பளமில்லாத உடம்பு அசௌகரிய லீவுதான் கிடைக்கும். ஷை லீவு சம்பளத்தை வேலைக்காரரின் வேண்டுகோளின்படி வாராந்திரம் கொடுக்கலாம், உடம்பு அசௌகரிய லீவை அந்தந்த வருடங்களில் உபயோகப்படுத்திக் கொள்ளாவிட்டால் அது ரத்தாகிவிடும். இந்தச் சட்டத்தினின்றும் குறைவான லீவு, விடுமுறை தினங்களுடன் செய்யப்பெற்ற எந்த ஒரு ஒப்பந்தமும் செல்லுபடியாகாது. இந்தச்சட்டத்தினின்றும் வேலைக்காரர்களுக்குச் சாதகமான லீவு விடுமுறை தினங்களுடன் கூடிய ஒப்பந்தமோ, தீர்மானமோ, அல்லது பழக்கவழக்கமோ இருந்தால் அவைகளை இச்சட்டம் எவ்விதத்திலும் பாதிக்காது. இச்சட்டத்தை மீறும் வேலைக்கு வைத்துக் கொள்பவர் அல்லது பர்ம், பொதுச்சபை இவைகளாயிருந்தால் அவற்றின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் மூன்று மாதத்திற்கு மேற்படாத சிறைவாசம் அல்லது ஐநூறு ரூபாய்களுக்கு மேற்படாத அபராதம் இவைகளுடன் தண்டிக்கப் பெறுவர்.

ஸ்தாவர சொத்து மாற்று (கட்டுப்பாட்டு)(திருத்த)ச் சட்டம்:-- (1952ம் வருஷத்திய 17-வது சட்டம்) இச்சட்டத்தில் '**அன்னியர்**' என்பதற்கு பர்மா யூனியன் பிரஜைகளல்லாத எல்லோரையும் அல்லது கம்பெனி, பொதுச்சபை முதலியவைகளாயிருந்தால் பார்வை பர்மா யூனியன் பிரஜைகளல்லாதவர்கள் கையிலுள்ளவைகளையும் அல்லது பர்மா யூனியன் பிரஜைகளிடம் கூடுதலான பங்கு இல்லாதவைகளையும் குறிப்பதாக அர்த்தமாகுமென்று கண்டுள்ளார்கள். பல நபர்களின் பொதுவான சுவாதீனத்தில் உள்ள சொத்துக்களையோ அல்லது பல வார்சுகள் உள்ள எஸ்டேட்டுகளின் சொத்துக்களையோ பிரித்து அவரவர்கள் பெயரால் மாற்றிக் கொள்வது இச்சட்டத்தின் மூலம் கட்டுப்படுத்தப் படமாட்டாது என்றும் திருத்தப்பெற்றிருக்கிறது. ஸ்தாவர சொத்து மாற்று (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தினின்றும் விதிவிலக்கு அளிக்கக் கூடிய அதிகாரம் பர்மா யூனியன் பிரசிடெண்ட் அவர்கள் கையிலிருக்கிறது.

பர்மா இன்கம்டாக்ஸ் (இரண்டாவது திருத்த)ச் சட்டம்:—(1952ம் வருஷத்திய 29வது சட்டம்) இச்சட்டத்தின் மூலம் பர்மா யூனியன் பிரஸிடெண்ட் எந்த அந்நிய தேசத்துடனும் வருமானவரி இரட்டிப்பாக வசூலிக்கப் பெறுமலிருப்பதற்காகக் குறிப்பிட்ட ஏற்பாடு கள் செய்துகொண்டு அறிக்கைகள் வெளியிடலாம். அந்த அறிக்கைகளின் படி வருமானவரி இரட்டிக்காமல் நிவாரணம் செய்து கொடுக்கப் பெறும்.

இந்தியா, பர்மா இன்கம்டாக்ஸ் நிவாரண உத்தரவு (ரத்து)ச் சட்டம்:—(1952ம் வருஷத்திய 30 வது சட்டம்) இந்தச் சட்டத்தின் மூலம் 1936ம் வருஷத்திய இந்தியா பர்மா இன்கம்டாக்ஸ் நிவாரண உத்தரவு 1948ம் வருஷம் செப்டம்பர் மாதம் 30உ யுடன் ரத்துச் செய்யப்பெறுகிறது.

குறிப்பு:—இனி இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் மேலே கண்ட 29வது சட்டப்படி குறிப்பிட்ட ஏற்பாடுகள் செய்து கொண்டால்தான் பர்மா இந்தியா இரட்டிப்பு இன்கம்டாக்ஸ் வரி நிவாரணம் கிடைக்கும்.

பர்மா விவசாயிகள் கடன் நிவாரண (திருத்த)ச் சட்டம்:—(1952ம் வருஷத்திய 22 வது சட்டம்) இச்சட்டத்தின் மூலம் விவசாயிகளிடமிருந்து வசூலாகவேண்டிய 1947-ம் வருஷத்திய விவசாயிகள் கடன் நிவாரணச்சட்டத்தின் ஷரத்துகள்படி போர்டாரால் குறைக்கப்பட்ட கடன் எதனையும் 1956-ம் வருஷம் ஜனவரி மாதம் முதல் தேதிக்கு முன் வசூல்செய்ய இணங்காது. ஷெ கடன்களுக்கு 1955-வருஷம் டிசம்பர் மாதம் 31-உ வரை வட்டி கிடையாது.

குறிப்பு:—ஏற்கனவே உள்ள சட்டத்தில் 1951-ம் வருஷம் டிசம் மாதம் 31-உ வரை வட்டி கிடையாது என்றும் 1952-ம் வருஷம் ஜனவரி மாதம் 1உக்குமுன் வசூல் செய்ய இணங்காது என்றும் இருந்ததை இச் சட்டத்தின் மூலம் நீடித்திருக்கிறார்கள்.

பர்மா விவசாயிகள் கடன் நிவாரண விதிகள்:—இவ்விதிகள் 1948ம் வருஷம் அக்டோபர் மாதம் 10உ விவசாயம் அண்டு காடுகள் இலாகா 244ம் நம்பர் அறிக்கை மூலம் வெளியிடப்பெற்று இவ் வருஷத்தில் நடைமுறையில் அமுல் செய்யப் பெறுகிறது. இவ்விதிகளின் படி ஒவ்வொரு ஜில்லாவிலும் பர்மா விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டத்தின் 3வது செக்ஷன் முதலாவது சப்-செக்ஷன்படி ஏற்படுத்தப்பெறும் போர்டுகளில் தலைவருடன் சாதாரணமாக உத்தியோகப் பற்றில்லாத மெம்பர்கள் இருப்பார்கள். இதில் அதிகபட்சம் விவசாயிகளின் பிரதிநிதிகள் இருப்பார்கள் தலைவர் உள்பட ஐந்து அல்லது மூன்று பேர்கள் உள்ள போர்டுகளுக்கு முறையே மூன்று அல்லது இரண்டு பேர்கள் கோரமாகும். அவர்கள் ஜில்லா தலைமைக் காரியாலயத்திலாவது அல்லது சப்-டிவிஷனல் காரியாலயத்திலாவது இருந்து விசாரணை செய்வர். கடன் கொடுத்தவருக்கு கடனின் விபரங்களைத் தெரிவிக்கும்படியும் கடன் கொடுத்தவர், கடன் வாங்கியவர் இருவருக்கும் குறிப்பிட்ட விசாரணைத் தேதியன்று ஆஜராகும்படியும் நோட்டீஸ்கள் அனுப்பப் பெறவேண்டும். 1945ம் வருஷத்து லேவாதேவிக்காரர்கள் சட்டப்படி ரிஜிஸ்தர் செய்து

கொள்ளாத கடன் கொடுத்தவர்களின் கடன்களையும், 1947-ம் வருடம் விவசாயக்கடன் மாரடோரியம் சட்டப்படி ரிஜிஸ்தர் செய்யப்பெறாத கடன்களையும் போர்டு விசாரணைக்கு எடுத்துக்கொள்ள மாட்டாது. போர்டு தனக்கு அவசியமில்லை எனத்தோன்றும் சாட்சிகளை விசாரணை செய்யாமலிருக்கலாம். போர்டு ஒவ்வொரு மனுவிற்கும் தனித்தனி பைல் ஏற்படுத்தி சாட்சிகளின் வாக்குமூலங்களைப்பதிவு செய்து நோட்டீஸ்கள், கடன் கொடுத்தவர்களின் ஸ்டேட்மெண்டுகள், கடன்களின் தஸ்தவேசுகளுடன் கூடிய பூரா விபரங்கள் இவைகளைக்கட்டிவைப்பர். தாங்கள்செய்யும் உத்தரவுகளைக் காரணங்களுடன் வெளியிடுவர். விவசாயியின் கடன், சொத்துவிபரங்களை அதற்குரிய ஸ்டேட்மெண்டுப்படி தயாரித்துவைப்பர். மூன்று மாதத்திற்கு ஒருமுறை சர்க்காருக்கு ரிப்போர்ட்டுகள் அனுப்பி வைப்பர். போர்டில் தாக்கல் செய்யும் மனுக்களுக்கு அணா பனிரண்டுக்குள்ள கோர்ட்டு பீஸ் ஸ்டாம்பு ஒட்ட வேண்டும். மேற்கொண்டு கடன் கொடுத்தவருக்கோ, கடன் வாங்கியவருக்கோ எவ்விதச்செலவுமில்லை. தலைவருக்கும் உத்தியோகப்பற்றில்லாத மெம்பர்களுக்கும் விசாரணை நடக்கும் நாட்களுக்கு 10 ரூபாய் வீதம் படியுண்டு. சாட்சி சொல்பவர்களுக்கு சிவில் சட்டப்படி அனுமதிக்கப்பெறும் பிரயாணச்செலவு, மற்ற செலவுகள் கொடுக்கப்பெறும்.

இச்சட்டப்படி கீழ்க்கண்ட பிரதேசங்களில் கடன் சமரச போர்டுகள் 1952-ம் வருஷம் டிசம்பர் மாதம் 18 உ. விவசாயம் அண்டு காடுகள் இலாகா 297-ம் நம்பர் அறிக்கை மூலம் அமைக்கப்பெற்றுள்ளன.

1. ஹந்தாவாடி ஜில்லா.

1. ஹெட்குவாட்டர்ஸ் அஸிஸ்டெண்ட், ஹந்தாவாடி — தலைவர்
2. ஊக்கிங் மவுங்லே—ஹைகோர்ட் அட்வகேட், சவுட்டான் டவுன்ஷிப் அகில பர்மா விவசாயிகள் சங்கம்.
3. ஊச்சான்—கூஞ்சாங்கோம் டவுன்ஷிப் அகில பர்மா விவசாயிகள் சங்கம்.
4. ஊக்கீன் லா—தோங்குவா டவுன்ஷிப் அகில பர்மா விவசாயிகள் சங்கம்.
5. ஊஞ்ஞான்டுன்—ஜில்லா அகில பர்மா விவசாயிகள் சங்கம்.

2. பியாப்பம் ஜில்லா.

1. அஸிஸ்டெண்ட் ஜட்ஜ் — தலைவர்
2. ஊத்தெயிங்பே—அகில பர்மா விவசாயிகள் சங்கம்.
3. ஊ செயின் வின் — ஷை
4. தக்கின் மீன் — ஷை
5. ஊ பாதிட் — ஷை

3. தத்துவம் ஜில்லா.

1. அஸிஸ்டெண்ட் ஜட்ஜ்—தத்துவம் தலைவர்
2. ஊ ஒவ்ம்பே—ப. ச. ப. ல.
3. ஊ மீன் தெயிங்—அகில பர்மா விவசாயிகள் சங்கம்
4. சோ ஸீட் தெயிங்—சட்டசபை மெம்பர்
5. ஊ ஸீட் மியாயிங்—அகில பர்மா விவசாயிகள் சங்கம்

4. தாராவாடி ஜில்லா.

1. அஸிஸ்டெண்ட் ஜட்ஜ் தலைவர்
2. தக்கின் டுங்செயின்—ஜில்லா அகில பர்மா விவசாயிகள் சங்கம்
3. கொக்கிங் மவுங்—ப. ச. ப. ல.
4. ....

5. இன்ஸீன் ஜில்லா.

1. அஸிஸ்டெண்ட் ஜட்ஜ் தலைவர்
2. ஊத்தாஜு—இன்ஸீன் அகில பர்மா விவசாயிகள் சங்கம்
3. ஊ சூ—மோபி ஷை
4. ஊமியா ஹாங்—டெட்டீட் ஷை
5. ஊப்போ ஹான்—லேக்கூ ஷை

6 இன்ஸீன் ஜில்லா (தக்கி சப்—டிவிஷன்)

1. அஸிஸ்டெண்ட் ஜட்ஜ் தலைவர்
2. தக்கீன் டின் மியா—அவுக்கான் அகில பர்மா விவசாயிகள் சங்கம்.
3. ஊச்சோ மவுங்—தக்கி ஷை
4. ஊசோ மவுங்—லேசெய் ஷை
5. ஊ அவுங்விங்—தாங்தப்பின் ஷை

7. மீன்பு ஜில்லா.

1. ஊ சான்—ரிடயர்ட் வெய்ன் அஸிஸ்டெண்ட் கமிஷனர் தலைவர்
2. ஊ லாபே—ஜில்லா அகில பர்மா விவசாயிகள் சங்கம்
3. ஊப்போதிட் — ஷை
4. ஊயேமவுங் — ஷை
5. ஊ ஹோக்தான்—டவுன்ஷிப் அகில பர்மா விவசாயிகள் சங்கம்

8. தவாய் ஜில்லா

1. அஸிஸ்டெண்ட் ஜட்ஜ் தலைவர்
2. ஊப் பே செயின்—சட்டசபை மெம்பர்
3. ஊ அவுங்தாங்—ஜில்லா அகில பர்மா விவசாயிகள் சங்கம்
4. ஊ பாவின் — ஷை
5. ஊக்கீக் செயின்—அகில பர்மா விவசாயிகள் சங்கம்

9. சவுப்பியூ ஜில்லா

1. அஸிஸ்டெண்ட் ஜட்ஜ் — தலைவர்
2. ஊப்போ ஜான்—பிளீடர்
3. ஊப்போத்தா—அகில பர்மா விவசாயிகள் சங்கம்
4. ஊ பாலா — ஷை
5. ஊப் பியூ லா — ஷை

10. டாங்கோ ஜில்லா

1. ஊப்பாச்சோ—ரிடயர்ட் மாஜிஸ்டிரேட்—டாங்கோ — தலைவர்
2. ஊ கூ—ஜில்லா அகில பர்மா விவசாயிகள் சங்கம்
3. ஊ சான் — ஷை
4. தக்கின் தான்ஜி—பியூ டவுன் அகில பர்மா விவசாயிகள் சங்கம்
5. ஊ ஓவ்ம் மீங்—அவுட்டின் டவுன் ஷை

11. பாசியன் ஜில்லா

1. சப் டிவிஷனல் ஆபீசர்—பாசியன் — தலைவர்
2. ஊ ஜமால்—சட்டசபை மெம்பர்—பாசியன் தெற்குத் தொகுதி
3. ஊ மியாயே—ஜில்லா ப. ச. ப. ல.
4. ஊ சுவேயான்—ஜில்லா அகில பர்மா விவசாயிகள் சங்மம்
5. சோ மியா செயிங்—சட்டசபை மெம்பர்—பாசியன் தெற்கு கரீன் தொகுதி

12. பக்கோக்கூ ஜில்லா

1. ஊப்பாட்டே —பி. ஏ., பி. எல்., சட்டசபை மெம்பர் — தலைவர்
2. தக்கின் பாச்சொவுக்—ஜில்லா அகில பர்மா விவசாயிகள் சங்கம்
3. ஊப்பா டெய்க்—ஜில்லா ப. ச. ப. ல.
4. ஊ செயின் குவாங்—ஜில்லா அகில பர்மா விவசாயிகள் சங்கம்
5. ஊக்கிங் வாங் — ஷை

13. சந்தட்டா ஜில்லா.

1. சப் டிவிஷனல் ஆபீசர் — தலைவர்
2. ஊட்டுங் யீங்-அகில பர்மா விவசாயிகள் சங்கம்
3. தக்கின் லா மியா யீங் — ஷை
4. தக்கின் டெயின் — ஷை
5. ஊட்டுன் கீ — ஷை

14. சந்தட்டா ஜில்லா (மைனுங் சப்—டிவிஷன்)

1. சப் டிவிஷனல் ஆபீசர் — தலைவர்
2. ஊ ஙீங்—ப. ச. ப. ல.
3. ஊ ஞ்ஞோ மவுங்—அகில பர்மா விவசாயிகள் சங்கம்
4. ஊட்டுன் புவின் — ஷை
5. ஊ மியாப் பே.

15. எமேதின் ஜில்லா

1. அஸிஸ்டெண்ட் ஜட்ஜ் — தலைவர்
2. ஊசுவே ஊ—ப. ச. ப. ல.
3. ஊ பாத்தான்—அகில பர்மா விவசாயிகள் சங்கம்
4. தக்கின் போஜுவா—தட்கோன் அகில பர்மா விவசாயிகள் சங்கம்
5. ஊ சோ—பியோபுவே

16. எமேதின் ஜில்லா (பின்மெஞ சப்—டிவிஷன்)

1. அஸிஸ்டெண்ட் ஜட்ஜ் — தலைவர்
2. போட்டொவுக் டெயின்—ப. ச. ப. ல.
3. தக்கின் லாட்டிங்—பின்மெஞ அகில பர்மா விவசாயிகள் சங்கம்
4. ஊத்தான் அவுங்—வேஉவே — ஷை
5. போயின் ஹான்—ஏலா

17. மீஞ்சான் ஜில்லா

1. அஸிஸ்டெண்ட் ஜட்ஜ் — தலைவர்
2. ஊ ஓங் செயிங்—பாரிஸ்டர், மீஞ்சான்.
3. ஊக்கின் லாமவுங் — ஷை
4. ஊத்தெயின் லாயிங்—மீஞ்சான் அகிலபர்மா விவசாயிகள்சங்கம்
5. ஊ பாட்டுன்—அகில பர்மா விவசாயிகள் சங்கம்,

18. முப்பின் ஜில்லா (எவுண்டம் சப்—டிவிஷன்.)

1. சப் டிவிஷனல் ஆபீசர்— — தலைவர்
2. தக்கின் ஓட்—ப. ச. ப. ல.
3. ஊனீ — ஷை
4. தக்கின் அவுங் தீன்—அகில பர்மா விவசாயிகள் சங்கம்,
5. ஊபியே — ஷை

19. ஆமர்ஸ்ட் ஜில்லா,

1. திரு. டோசுவீ கூ—ஹைக்கோர்ட் அட்வகேட் — தலைவர்
2. தக்கின் கோ—ஜில்லா அகில பர்மா விவசாயிகள் சங்கம்
3. சோ ஆ ஆ — ஷை
4. போச்சோத் தெயின்—சட்டசபை மெம்பர்
5. தக்கின் ஹாயிங்.

கீழ்கண்ட பிரதேசங்களில் கடன் சமரச போர்டுகள் 1953-ம் வருஷம் மே மாதம் 23-உவிவசாயம் அண்டுகாடுகள் இலாகா 132-ம் நிம்பர் அறிக்கை மூலம் அமைக்கப் பெற்றுள்ளன.

1. பக்கோ ஜில்லா.

1. அஸிஸ்டெண்ட் ஜட்ஜ்—பக்கோ — தலைவர்
2. ஊட்டுங் மவுங்—சட்டசபை மெம்பர்—ஜில்லா ப. ச. ப. ல.
3. தக்கின் தீன் கீ—ஜில்லா அகில பர்மா விவசாயிகள் சங்கம்.
4. ஊச்சோ ஞெயின்—சட்டசபை மெம்பர்—கவ்வா,
5. ஊட்டோ—சட்டசபை மெம்பர்—ஓவ்,

2. இரங்கூன் ஜில்லா

1. கலெக்டர்—இரங்கூன் தலைவர்
2. ஊப்பியூ—தலைவர், எயுயா கிராமக் குடியாண்மை விநியோகக் கமிட்டி.
3. ஊசெயின்—தலைவர், டாம்புவே ஷை
4. போஞ்ஞான்—கூட்டுக்காரியதரிசி—ப. சு. ப. ல.—இரங்கூன்.
5. ஊவின்—ஜில்லா ஆர்கனைசர்—அகில பர்மா விவசாயிகள் சங்கம் இரங்கூன்.

3. மியாங்மியா ஜில்லா.

1. ஊ அவும்பே பி. ஏ., பி. எல்., அட்வகேட் தலைவர்
2. ஊச்சவுக் செயின்—ஜில்லா அகில பர்மா விவசாயிகள் சங்கம்
3. ஊப்பெயிக்—வியாபாரி
4. ஊஹார்னிஸ்—ஜில்லா ப. ச. ப. ல.
5. மாங்டுன் யோன்—சட்டசபை மெம்பர்.

4. மெர்குவி ஜில்லா

1. அஸிஸ்டெண்ட் ஜட்ஜ்—மெர்குவி — தலைவர்
2. ஊக்கீங்பு—நிலச்சுவாந்தார்—பூலோ
3. ஊசோயின்—சோஷலிஸ்ட் பார்ட்டி—மெர்குவி
4. ஊபாட்டுன்—ப. ச. ப. ல.—மெர்குவி
5. ஊயேமவுங்—அகிலபர்மா விவசாயிகள் சங்கம், மெர்குவி

5. மாந்தலே ஜில்லா.

1. ஊக்கா—ரிடயர்ட் டிபுடி கமிஷனர் — தலைவர்
2. ஊஞ்ஞான்—அகில பர்மா விவசாயிகள் சங்கம்
3. ஊப்போசோ — ஷை.
4. ஊபாச்சுவே—ப. ச. ப. ல.
5. ஊத்தவுங்டின்—நிலச்சுவாந்தார்

6. கத்தா ஜில்லா.

1. அஸிஸ்டெண்ட் ஜட்ஜ்—கத்தா தலைவர்
2. ஊஓங்பே—அட்வகேட்
3. ஊமியாடின்—வியாபாரி
4. தக்கீன் மியாமவுங்—கத்தா ப. ச. ப. ல.
5. ஊகஙீங் மவுங்—கவ்லின் அகில பர்மா விவசாயிகள் சங்கம்

7. புரோம் ஜில்லா

1. அஸிஸ்டெண்ட் ஜட்ஜ் தலைவர்
2. ஊசோலாயிங்—பட்டான் அகில பர்மா விவாசாயிகள் சங்கம்
3. ஊப்போசின்—புரோம் ஷை
4. ஊமியாக் கீங்—பவுக்கோங் ஷை
5. ஊத்தாஹாங்—புரோம் ஷை

8. புரோம் ஜில்லா (பவுண்டைசப்—டிவிஷன் ஹெட் குவாட்டர்ஸ்)

1. அஸிஸ்டெண்ட் ஜட்ஜ் — தலைவர்
2. தக்கீன்லாக்கி—பவுண்டை அகில பர்மா விவசாயிகள் சங்கம்
3. ஊயே — ஷை
4. தக்கீன்சான்மீன்—தேக்கோன் — ஷை
5. ஊச்சோத்தெயின்—சுவேடாங்.

விற்பனை வரிச் சட்டம்:—(1952-ம் வருஷத்திய 18-வது சட்டம்) இச்சட்டம் 1949-ம் வருஷத்திய விற்பனை வரிச்சட்டத்திற்குப் பதில் நிறைவேற்றப்பெற்றுள்ளது. ஏற்கனவே ஒவ்வொரு விற்பனைப்பொருளுக்கும் பல வியாபாரிகளிடத்தில் மாறும் பொழுதும் பல தடவைகளாக வசூலிக்கப்பெற்றுவந்த இந்த விற்பனை வரி இச்சட்டத்தின் மூலம் ஒரே இடத்தில் வசூலிப்பதென நிர்ணயிக்கப்பெற்றுள்ளது. இறக்குமதிப் பொருள்களுக்கு இறக்குமதி வியாபாரிகளிடத்திலும் உள்நாட்டு உற்பத்திப் பொருள்களுக்கு உற்பத்தியாளர்களிடத்திலும் வரிவசூல் செய்யப்பெறும். வரியைபொருள்கள் இறக்குமதி செய்யப்பெறும் காலத்திலோ அல்லது உற்பத்தி செய்யப்பெறும் காலத்திலோ கட்டினால் ஒருவிதமும் அல்லது மூன்று மாதம் தவணையில் கட்டினால் வேறுவிதமும் செலுத்தவேண்டும்.

பொருள்கள் விபரம்.	உடனே செலுத்தவேண்டிய வரி	தவணையுடன் செலுத்தவேண்டிய—வரி.
வசதிக்கான பொருள்கள்	15 சத விகிதம்	18.75 சத விகிதம்
சாதாரணப் பொருள்கள்	10 சத விகிதம்	12.50 சத விகிதம்
சலுகைப் பொருள்கள்	5 சத விகிதம்	6.25 சத விகிதம்

இறக்குமதிப் பொருள்களுக்கு இறக்குமதி விலையின் பேரிலும் உற்பத்திப்பொருள்களுக்கு உற்பத்தி செய்துமுடித்த அடக்கத்தின் பேரிலும் வரி விதிக்கப்பெறும். கீழ்கண்ட விற்பனைகளுக்கு வரி ஏற்படாது. 1. அரைகுறையாக்ச் செய்யப்பெற்ற பொருள்களை வேறொரு உற்பத்தியாளருக்கு விற்பது. 2. ஒரு குறிப்பிட்ட அளவுக்குக்குறைந்த உற்பத்தியாளரின் விற்பனைகள். 3. உற்பத்தியாளர்களின் உற்பத்திக்காக இறக்குமதி செய்யும் அரைகுறையாகச்செய்யபபெற்ற பொருள்கள். 4. சொந்த உபயோகத்திற்கு இறக்குமதி செய்யப்பெறும் பொருள்கள். 5. ஒரு உற்பத்தியாளரிடமிருந்து மற்றொரு உற்பத்தியாளருக்கு விற்பனை செய்யப்பெறும் பொருள்கள். இந்த வரிக்லைக்கூட்டவோ குறைக்கவோ ரத்துச்செய்யவோ அல்லது ஒருதாச்சாமான்களுக்கு வேறுவிதமாக மாற்றவோ பிரஸிடெண்டுக்கு அதிகாரமுண்டு. இறக்குமதி வியாபாரிகளும் உற்பத்தியாளர்களும் இச்சட்டப்படி தங்கள் பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளவேண்டும்.

குடியாண்மை விநியோகச் சட்டம்:—(1953-ம் வருஷத்திய 17-வது சட்டம்) இச்சட்டம் 1948-ம்வருஷத்திய 4 வது சட்டத்திற்கு பதில் 1953-ம் வருஷம் மார்ச்சு மாதம் 24 உ முதல் பர்மா யூனியன் பூராவிலும் அமுலுக்கு வந்துள்ளது. முந்திய சட்டத்தைப்போலவே இச்சட்டமும் நிலங்களைச் சேவாவுக்கு அடைக்கும் உரிமையை சர்க்காரால் ஏற்படுத்தப்பெறும் கமிட்டிகளிடம் ஒப்படைக்கிறது. 50 ஏக்கர்களுக்கு மேற்படாமல் தன் சொந்தக் கைகளால் தன்னுடைய உபஜீவனத்திற்கு முக்கிய ஆதாரமாக வேளாண்மை செய்யப்பெறும் நிலங்களையும் பிரஸிடெண்டால் விதிகளின் மூலம் அவ்வப்பொழுது விலக்கப்பெறும் நிலங்களையும் இச்சட்டம் பாதிக்காது. இச்சட்டப்படி குடியாண்மை பெற்று, தகுந்த காரணமில்லாமல் சாகுபடி செய்யத்தவறிய எவரும், அல்லது அந்த நிலத்தை வேறு நபருக்குத்திரும்ப விநியோகம் செய்த எவரும், அபராதத்துடனோ அல்லது சிறைவாசத்துடனோ தண்டிக்கப்பெறுவர். இச்சட்டத்தின் ஷரத்துகளையோ அல்லது அவைகளின் கீழ்ச் செய்யப்பெறும் விதிகளின் ஷரத்துகளையோ அமுல் செய்யும் நபர் அல்லது அதிகாரிகள் செய்யும் ஆர்டர்களின் பேரில் எவ்வித நடவடிக்கையும் சிவில் அல்லது வரிக்கோர்ட்டுகளில் எடுக்க இயலாது. அந்த நபர் அல்லது அதிகாரிகளின் பேரிலும் சிவில், கிரிமினல் அல்லது இதர வகைகளில் நடவடிக்கைகள் எடுக்க இணங்காது.

குடியாண்மை விநியோக விதிகள் :—(விவசாயம் அண்டு காடுகள் இலாகா 1953-ம் வருஷத்திய 113-ம் நிம்பர் அறிக்கை) 1953-ம் வருஷம் மே மாதத்தில் வெளியிடப் பெற்ற இவ்விதிகள் ஏற்கனவே 1951-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் 93-ம் நிம்பர் அறிக்கை மூலம் செய்யப் பெற்ற விதிகளுக்குப்பதில் அமுலுக்குவரும். ஏற்கனவே முந்திய விதிகளின்படி நியமிக்கப்பெற்ற கமிட்டிகளும், மெம்பர்களும் இந்த விதிகளின்படி நியமிக்கப் பெற்றுள்ளதாகக்கருதப் பெறுவர். அவர்கள் நிலங்களை அடைப்பதற்குள்ள அதிகாரம் 1953-ம் வருஷத்திய ஜூன் மாதம் 6உ விவசாயம் அண்டு காடுகள் இலாகா 146-ம் நிம்பர் அறிக்கை மூலம் அளிக்கப் பெற்றுள்ளது. முந்திய விதிகளிலிருந்து இந்த விதிகளில் அதிக மாறுதலில்லை. நிலங்களைக் குறிப்பிட்ட காலத்திற்குள் அடைக்க தக்கிகளைத் தலைமையாகக்கொண்டகிராம அல்லது வார்டுக் குடியாண்மை விநியோகக் கமிட்டிகளும் அந்த முடிவுகளின் பேரில் திருப்தியில்லாதவர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் அப்பீல் செய்துகொள்ள டிபுடிக்கமிஷனர்களைத் தலைமையாகக்கொண்ட ஜில்லாக்குடியாண்மை விநியோகக்கமிட்டிகளும் அந்த முடிவுகளைத்தாங்களாகவோ அல்லது அப்பீல்களின் பேரிலோ மறுகுடியாண்மை வருஷத்திற்குமுன் பரிசீலனை செய்து, முடிவு செய்ய கமிஷனர்களைத் தலைமையாகக் கொண்ட பிரதேச குடியாண்மை விநியோகக் கமிட்டிகளும் இருக்கும். கிராம அல்லது வார்டு குடியாண்மை விநியோகக் கமிட்டிகளில் தக்கி தலைவராகவும் டிபுடி கமிஷனரால் நியமிக்கப் பெற்று பிரஸிடெண்டால் ஆமோதிக்கப் பெற்ற 6 மெம்பர்களும் இருப்பர். ஜில்லாக்குடியாண்மை விநியோககமிட்டிகளில் டிபுடிக் கமிஷனர் தலைவராகவும் அந்த ஜில்லா நில ஆர்கனைசர் காரியதரிசியாகவும் பிரஸிடெண்டால் நியமிக்கப் பெற்ற 8 மெம்பர்களும் இருப்பர். பிரதேசக் குடியாண்மை விநியோகக் கமிட்டிகளில் கமிஷனர் தலைவராகவும் அந்தப் பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு ஜில்லாக் குடியாண்மை விநியோகக் கமிட்டிக்கும் பிரஸிடெண்டால் நியமிக்கப் பெற்ற பிரதிநிதி ஒருவர் வீதம் மெம்பராகவும் அந்தப் பிரதேசத்தின் தலைமைக்காரியாலயத்தில் நில ரிக்

கார்டுகள் சூப்பரிண்டெண்டெண்ட் காரியதரிசியாகவும் இருப்பர். தகுந்த காரணங்களில்லாமல் முன் வருஷத்தில் அடைக்கப்பெற்ற நிலத்தை விவசாயம்செய்யத் தவறுமலிருந்தவர்கள், தகுந்த காரணங்களில்லாமல் அந்த நிலத்திற்கு முந்திய விவசாயவருஷத்திற்கு சேவாரவைக் கொடுக்கத் தவறுருந்தவர்கள், தகுந்த காரணமில்லாமல் அவருக்குக் கொடுக்கப்பெற்ற விவசாயக் கடனைத் திரும்பச் செலுத்தத் தவறுதிருந்தவர்கள், தனக்குக் கொடுக்கப்பெற்ற விவசாய நிலத்தை மற்றொருவருக்குத் திரும்பக் கொடுக்காதிருந்தவர்கள், அந்த நிலத்தைத் தொடர்ந்து விவசாயம் செய்ய அனுமதிக்கப் பெறுவர். தகராறுள்ள எந்த நிலத்தையும் விநியோகிக்கும் உத்தரவை கிராம அல்லது வார்டு குடியாண்மை விநியோகக் கமிட்டிகள் அதனுல் பாதிக்கப்படக்கூடிய பார்ட்டிகளுக்கு விசாரணைத் தேதிக்குக் குறைந்தது 5 நாட்கள் முன்னதாகத் தெரிவிக்காமல் செய்யக்கூடாது. அதேபோல் அப்பீல்களிலும் மறு அப்பீல்களிலும் இருதரப்பாருக்கும் நோட்டீஸ்கள் கொடுத்து விசாரணை நடைபெற வேண்டும். தீர்ப்புகளில் விசாரணையில் கலந்துகொண்ட கமிட்டி மெம்பர்கள் எல்லோரும் கையெழுத்துச் செய்ய வேண்டும். கிராம அல்லது வார்டு குடியாண்மை விநியோகக் கமிட்டியார் சரிவர வேலை செய்யாத அல்லது செய்ய இணங்காத இடங்களில் அதன் அதிகாரங்களை பிரஸிடெண்ட் உசிதம்போல் வேறொரு கமிட்டிக்கோ, நபர் அல்லது நபர்களுக்கோ கொடுக்கலாம்.

அவ்விதம் இவ்வருஷத்தில் நெல்விளையும் நிலங்களுக்கு கிராம அல்லது வார்டு குடியாண்மை விநியோகக் கமிட்டிகள் மனுக்களின் பேரில் முடிவுசெய்ய 10-6-53வரையும் ஜில்லா குடியாண்மை விநியோகக் கமிட்டிகளிடம் அப்பீல் செய்து கொள்ள 25-6-53வரையும் அவர்கள் அந்த அப்பீல்களை முடிவுசெய்ய 25-7-53வரையும் குறிப்பிடப் பெற்றது. நெல் அல்லாத இதர பயிர்கள் விளையும் நிலங்களுக்கு கிராம அல்லது வார்டு குடியாண்மை விநியோகக் கமிட்டிகள் மனுக்களின் பேரில் முடிவுசெய்ய 19-3-53வரையும் ஜில்லா குடியாண்மை விநியோகக் கமிட்டிகளிடம் அப்பீல் செய்துகொள்ள 5-7-53-வரையும் அவர்கள் அந்த அப்பீல்களை முடிவுசெய்ய 4-8-53வரையும் குறிப்பிடப்பெற்றது.

விவசாய பேங்குகள் சட்டம்:—(1953-ம் வருஷத்திய 27 வது சட்டம்) இச்சட்டம் விவசாய அபிவிருத்தியை உத்தேசித்து கடன்கள் கொடுத்து வாங்கக் கூடிய பாங்குகள் திறக்கக் கூடியதாக ஏற்படுத்தப் பெற்றுள்ளது. இச்சட்டம் மாந்தலே, பக்கோ, இன்சின், ஈங்தட்டா ஜில்லாக்களில் 1953-ம் வருஷம் ஜூன் மாதம் 1-வ முதல் அமுலுக்கு கொண்டுவரப் பெற்றுள்ளது. இந்தப் பேங்குகளின் டைரக்டர்கள் வருமாறு.

1. மிஸ்டர் டி. கே. பூன் பி. ஏ., பி. எல்., ஹைகோர்ட் அட்வகேட்
2. ஊசோமவுங், சட்டசபை மெம்பர், நவுவியப்பன்.
3. ஊதாட்டூன், டிை ஹாந்தாவாடி.
4. ஊபாத்தே, டிை பேக்கலே.

தொழில் இடங்கள் வரிச்சட்டம் 1949:—இச்சட்டத்தின்படி தொழில்செய்யும் இடங்களில் 100 ரூபாய்க்கு மேற்பட்ட வாடகை மதிப்பு உள்ளவைகளுக்கு 20 சதவிகிதம் வரிவிதித்து வந்ததை 1952 ம் வருஷம் அக்டோபர் மாதம் 1-வ முதல் ரத்துச் செய்திருக்கிறார்கள்.

ஷாப்புகள், ஸ்தாபனங்கள் சட்டம்:—இச்சட்டம் அறிக்கைகள் மூலம் இரங்கூனில் 1-1-52-உ முதலும் மாந்தலே, மோல்மேன், பாசீன், அக்யாப், இன்சீன் இந்த இடங்களில் 1-5-53-உ முதலும் அமுலுக்குக் கொண்டு வரப் பெற்றுள்ளது.

பர்மா யூனியன் பேங்க் சட்டம்:—இச்சட்டத்தின் கீழ் லேசன்ஸ் வழங்கப்பெற்று பர்மா தேசத்தில் பேங்கிங் தொழில் செய்ய உரிமைபெற்ற பேங்குகளில் பாங்க் ஆப்செட்டிநாடு லிமிடெட் பாங்கிங் தொழில் செய்யாததால் விலக்கப் பெற்றுள்ளது. ஹப்பீப் பாங்க் ஒவர் சீஸ் லிமிடெட் என்ற பேங்க் லிஸ்டில் சேர்க்கப் பெற்றுள்ளது.

சில முக்கிய தீர்ப்புகள்.

காலாவதி நிர்ணயம் பற்றி:—காலாவதி தோஷம் பற்றிப் பலவித அபிப்பிராயங்கள் இருந்துவருகின்றன. 1950-ம் வருஷத்திய 19ம்-நிம்பர் "காலாவதியையும் வளரும் வட்டியையும் சரிக்கட்டும் விசேஷச் சட்டம்" என்னும் சட்டத்தில் 1948-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 19-உ முதல் குழப்பக்காரர்களால் ஆக்கிரமிக்கப் பெற்ற எந்தப் பிரதேசத்திலும் சட்ட ரீதியான சர்க்கார் சிவில் நிர்வாகத்தைத் தற்காலிகமாக வாபஸ் வாங்கிய தேதியிலிருந்து பிரசிடெண்ட் அந்தப் பிரதேசத்திற்குக் குறிப்பிடக்கூடும் தேதிவரை சிவில் கோர்ட்டுகள் மூடப் பெற்றிருப்பதாகக் கருதப்பெறும் என்றும், அந்தக் கால அளவிற்கு வட்டியும் வளராதென்றும் தெரிவித்திருக்கிறார்கள்' ஷெ சட்டப்படி எந்தப்பிரதேசத்திற்கும் பிரஸிடெண்டின் அறிக்கை இன்னும் வெளியாகவில்லை.

இப்பிரச்னைப்பற்றிப் பலவித தாவாக்கள் ஏற்பட்டு கோர்ட்டுகளில் கேஸ்கள் நடக்கின்றன. புரோம் ஜில்லாக் கோர்ட்டில் காலாவதி தோஷம் இல்லை என்ற சாதகமான தீர்ப்பும், மக்குவே, மீன்பு ஜில்லாக் கோர்ட்டுகளில் காலாவதி தோஷம் உண்டு என்ற பாதகமான தீர்ப்புகளும் செய்யப்பெற்றுள்ளன.

நிற்க, மக்குவே ஜில்லாக் கோர்ட்டுத் தீர்ப்பின் பேரில் ஹைக் கோர்டில் ஒரு அப்பீல் தாக்கல் செய்யப் பெற்றது. ஹைக் கோர்ட் நீதிபதி ஊஅவுங்கைக் அவர்கள் 1952-ம் வருஷத்திய சிவில் இரண்டாவது 18-ம் நிம்பர் அப்பீலில் பிரஸிடெண்டின் அறிக்கை வெளியாகாதவரை லிமிட்டேஷன் சட்டம் 4 வது செக்ஷன்படி சிவில் கோர்டுகள் மூடப் பெற்றிருப்பதாகவே கருதவேண்டுமென்று தீர்ப்பளித்திருக்கிறார்கள்.

இப்பிரச்னைபற்றிய அப்பீல்கள் சில இன்னும் விசாரணையிலிருந்து கொண்டிருக்கின்றன. முடிவுகள் பெரும்பாலும் இதையனுசரித்தே இருக்கக்கூடுமென்று நம்புகிறோம்.

லேவாதேவிச்சட்டப்படி வட்டிவாங்கக்கூடிய அளவு: ஏற்கனவே சுப்ரீம் கோர்ட்டார் செய்த தீர்ப்பை அநுசரித்து இவ்வருஷமும் முடிவு செய்துள்ளார்கள். ஒருவர் அசலளவு வட்டி வாங்கிவிட்டால் அதற்குப் பிறகு அவர் வட்டிக்குக் கோர்ட்டுகளில் தொடர இணங்காது என்ற முடிவு மீண்டும் உறுதி செய்யப் பெற்றுள்ளது.

நிலப் பிரச்னைகள்.

நிலங்களைத் தேசியமாக்குதல்:- நிலங்களைத் தேசியமாக்க ஒரு தனி இலாகா ஏற்படுத்தப் பெற்றுள்ளதால் வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. நிலம் தேசியமாக்கும் சட்டத்தை 8-5-53ல் 17-ம் நிம்பர் அறிக்கையின் மூலம் எமேதீன் ஜில்லா பின்மெனு டவுன்ஷிப்பில் அமுலுக்குக் கொண்டுவந்தார்கள். பிறகு 22-6-53ல் 31-ம் நிம்பர் அறிக்கையின் மூலம் ஷை சட்டம் பர்மா யூனியனில் ஏற்கனவே அமுலி லில்லாத பிரதேசங்கள் எல்லாவற்றிலும் அமுலுக்குக் கொண்டுவந்து விட்டார்கள். ஷை சட்டம் அமுலுக்கு வந்துள்ள பிரதேசங்களையும் தேதிகளையும் கீழே தருகின்றோம்:—

தாராவாடி ஜில்லா, சவ்சே ஜில்லா, ஈந்தட்டா ஜில்லாவில் ஈந்தட்டா டவுன்ஷிப், அமராபுரா ஜில்லாவில் அமராபுரா டவுன்ஷிப், டாங்கோ ஜில்லாவில் ஜெயாவாடி கிராண்ட்,	1949ம்௵ ஜனவரி மீ 4ல் முதல்
இன்சின் ஜில்லாவில் தக்கி டவுன்ஷிப்	1949ம் ௵ ஜனவரி மீ 10ல் ,,
ஹந்தாவாடி ஜில்லாவில் ஸிரியம் டவுன்ஷிப்	1950ம் ௵ ஏப்ரல் மீ 3ல் ,,
எமேதீன்ஜில்லாவில்பின்மெனுடவுன்ஷிப்	1953ம் ௵ ஏப்ரல் மீ 1ல் ,,
பர்மா யூனியனிலுள்ள மற்ற எல்லா பிரதேசங்கள்	1953ம் ௵ ஜூன் மீ 22ல் ,,

இவைகளில் இதுவரை ஹந்தாவாடி ஜில்லா ஸிரியம் டவுன்ஷிப்பில் மட்டும் நிலங்களை எடுத்துப் பிரித்துக் கொடுத்துள்ளார்கள்.

சட்டம் அமுலுக்கு வரும் தேதிமுதல் சட்டத்தின் முதலாவது ஷெட்யூலில் 4, 5, 6 வது அயிட்டங்களாகக் கண்ட டன்னி, பழமரத்தோட்டங்கள், பூந்தோட்டங்கள், ரப்பர், இவைகள் பயிர் செய்யப்படும் நிலங்கள் தவிர மற்ற நிலங்களை ஈடுவைக்கவோ, விற்கவோ, மற்ற நபர்கள் அல்லது மத சம்பந்தமான ஸ்தாபனங்கள் அல்லது மத சம்பந்தமான நபர்கள் இவர்களுக்கு மாற்றவோ சட்டம் இடமளிக்கவில்லை. இந்த விபரங்கள் எல்லா ரிஜிஸ்தரேஷன் ஆபீஸர்களுக்கும், நில ரிக்கார்டுகள் ஆபீஸர்களுக்கும் தெரிவிக்கப்பெற்று அவர்கள் தஸ்தவேசுகளைப் பதியவோ அல்லது நிலங்களைப் பேர்மாற்றவோ மறுத்துவருகிறார்கள்.

நிலம் தேசியமாக்கும் சட்டம் 14 வது செக்ஷன் முதலாவது சப் செக்ஷனில் கண்ட காரியங்களை நிறைவேற்ற 3 வது சப்செக்ஷனில் கண்ட அதிகாரங்களுடன் கீழ்க்கண்ட ஜில்லாக்களில் கீழ்க்கண்ட நபர்களைக் கொண்ட தற்காலிக ஜில்லா நிலக்கமிட்டிகளை பிரஸிடெண்ட் ஏற்படுத்தியுள்ளார்.

1. *தாராவாடி ஜில்லா:* 1-4-53

1. டிபுடி கமிஷனர், தாராவாடி. — தலைவர்
2. நில ரிக்கார்டுகள் ஸூப்ரன்டெண்டெண்ட், தாராவாடி. — காரியதரிசி.

3. அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்டரார், கூட்டுறவு சொசைட்டிகள், தாராவாடி, மெம்பர்
4. பிரதம விவசாய அஸிஸ்டெண்ட், தாராவாடி, ஷை
5. தக்கிங் ஓன் மவுங், தலைவர், ஜில்லா அகில பர்மா விவசாயிகள் சங்கம், ஷை
6. தக்கின் டூன் செயிங், மெம்பர், அகில பர்மா விவசாயிகள் சங்கம், லேப்டான், ஷை
7. தக்கிங் கான்ட், தலைவர், அகில பர்மா விவசாயிகள் சங்கம், தாராவாடி டவுன்ஷிப், ஷை
8. ஊப்போ தாஞ்ஞுான், சட்டசபை மெம்பர், நத்தலின், ஷை

2. மாந்தலை ஜில்லா: 1-4-53

1. டிபுடி கமிஷனர், மாந்தலை தலைவர்
2. நில ரிக்கார்டுகள் சூப்ரன்டெண்டெண்ட், மாந்தலை காரியதரிசி
3. டிபுடி ரிஜிஸ்தரார், கூட்டுறவு சொசைட்டிகள், மாந்தலை மெம்பர்
4. டிபுடி விவசாய டைரக்டர், மாந்தலை ஷை
5. ஊஞான், தலைவர், ஜில்லா அகில பர்மா விவசாயிகள் சங்கம், ஷை
6. ஊசோ, தலைவர், அகில பர்மா விவசாயிகள் சங்கம், அமராபுரா, ஷை
7. ஊச்சோஞ்ஞுான், பொதுக்காரியதரிசி, ஜில்லா அகில பர்மா விவசாயிகள் சங்கம், ஷை
8. ஊட்டுங்சைங், கூட்டுக்காரியதரிசி, ஷை ஷை

3. ஈந்தட்டா ஜில்லா: 1-4-53

1. டிபுடி கமிஷனர், ஈந்தட்டா தலைவர்
2 நில ரிக்கார்டுகள் சூப்ரன்டெண்டெண்ட், ஈந்தட்டா, காரியதரிசி
3. அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்தரார், கூட்டுறவு சொசைட்டிகள் ஈந்தட்டா மெம்பர்
4. பிரதம விவசாய அஸிஸ்டெண்ட், ஈந்தட்டா ஷை
5. ஊட்டுன்யிங், தலைவர், ஜில்லா அகில பர்மா விவசாயிகள் சங்கம் ஷை
6. தக்கீன் லாமியாயின் காரியதரிசி ஷை ஷை
7. தக்கீன் டெயிங், மெம்பர் ஷை ஷை
8. ஊமவுங் மவுங், சட்டசபை மெம்பர், ஈந்தட்டா தெற்குத் தொகுதி ஷை

4. எமேதின் ஜில்லா: 1-4-53

1. டிபுடி கமிஷனர், எமேதீன், தலைவர்
2. நில ரிக்கார்டுகள், சூப்ரன்டெண்டெண்ட், எமேதீன், காரியதரிசி
3. அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்தரார், கூட்டுறவு சொசைட்டிகள், எமேதீன் மெம்பர்
4. பிரதம விவசாய அஸிஸ்டெண்ட், எமேதீன் ஷை

5. போடோவுக் டெயின், சட்டசபை மெம்பர், பின்மெளு, மெம்பர்
6. தக்கீன் லாட்டிங், மெம்பர், ஜில்லா அகில பர்மா விவசாயிகள் சங்கம், ஷை
7. ஊப்பாத்தான், மெம்பர், ஷை ஷை
8. தக்கீன் கோ, மெம்பர், அகில பர்மா விவசாயிகள் சங்கம், பின்மெளு, ஷை

5. இன்சீன் ஜில்லா 1-4-53

1. டிபுடி கமிஷனர், இன்சீன், தலைவர்
2. நில ரிக்கார்டுகள் சூப்பரன்டெண்டெண்ட், இன்சீன், காரியதரிசி
3. அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்தரார், கூட்டுறவு சொசைட்டிகள், இன்சீன், மெம்பர்
4. அஸிஸ்டெண்ட் விவசாய டைரக்டர், இன்சீன், ஷை
5. தக்கீன் டின்மியா, மெம்பர், ஜில்லா அகில பர்மா விவசாயிகள் சங்கம், ஷை
6. ஊட்டின் டுன், பொதுக்காரியதரிசி, ஜில்லா ப.ச.ப.ல. ஷை
7. தக்கீன் காஹ்ன், பொதுக்காரியதரிசி, ஜில்லா அகில பர்மா விவசாயிகள் சங்கம், ஷை
8. ஊத்தாவு, உபதலைவர், ஜில்லா அகில பர்மா விவசாயிகள் சங்கம், ஷை

6. சவுசே ஜில்லா 1-4-53

1. டிபுடி கமிஷனர், சவுசே தலைவர்
2. நில ரிக்கார்டுகள் சூப்பரன்டெண்டெண்ட், சவுசே, காரியதரிசி
3. அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்தாரார், சவுசே மெம்பர்
4. பிரதம விவசாய அஸிஸ்டெண்ட், சவுசே ஷை
5. ஊபானி, சட்டசபை மெம்பர், சவுசே வடக்குத் தொகுதி ஷை
6. தகீன் ஷெயிங், மெம்பர், மேல்சபை, சவுசே ஷை
7. ஊக்காண்டுங், மெம்பர், ஜில்லா அகில பர்மா விவசாயிகள் சங்கம், ஷை
8. ஊலாமவுங், மெம்பர், ஷை ஷை

நிலம் நஷ்ட யிட்டுக் கமிஷன்:-நிலம் நஷ்ட யீட்டுக் கமிஷனின் முந்திய தலைவர் தக்கீன் சோட்டுங் அவர்கள் விவசாயம் அண்டு காடுகள் இலாகா மந்திரியாகவும் மெம்பர்கள் ஊப்பாட்டே அவர்கள் நிலம் தேசியமாக்கும் இலாகா காரியதரிசியாகவும் தக்கீன் தாக்கீன் அவர்கள் வியாபாரம், சப்ளை இலாகா மந்திரியாகவும் ஆகிவிட்டபடியால் 15-2-52ட க்குப் பிறகு கூட்டங்கள் கூடாமல் நின்றுவிட்டன. பிறகு தலைவர் தக்கீன் சோட்டுங் என்பவருக்குப் பதிலாக நிலம் தேசியமாக்கும் இலாகா பார்லிமெண்டரி காரியதரிசி தக்கீன் சான்மீங் என்பவர் 31-7-52ட முதல் தலைவராக நியமிக்கப் பெற்றார். மெம்பர்கள் சோச்சோயீன், ஊசான்டுங் அவுன், ஊச்சாப்பூ, ஊப்பாட்டே, தக்கீன் டுன்யீங் இவர்களுக்குப் பதிலாக தக்கீன் பாத்தே, சோமவுங் செயின், சோக்கூன் சான், ஊவபோஅவுங், தக்கீன் பாத்தெயிங், இவர்கள் 26-2-53ட முதல் மெம்பர்களாக நியமிக்கப்பெற்றனர். மெம்பர் தக்கீன் தாக்கீங் என்பவ

ருக்குப் பதிலாக போமூஅவுங் என்பவர் 26-2-53ல் முதல் மெம்பராக நியமிக்கப்பெற்ருர். மெம்பர் தக்கீன் டின்மவுங் என்பவருக்குப் பதிலாக தக்கீன் தெய்ங்மவுங் என்பவர் 26-2-53ல் முதல் மெம்பராக நியமிக்கப் பெற்ருர். ஆக கீழ்க்கண்ட புதுக்கமிட்டி உருவாயிற்று.

1. தக்கீன் சான்மீங்-தலைவர்-பார்லிமெண்டரி காரியதரிசி, நிலம் தேசிய மாக்கும் இலாகா.
2. தக்கீன் பாத்தெயிங்-சட்டசபை மெம்பர்-பார்லிமெண்டரி காரிய தரிசி-விவசாயம் அண்டு காடுகள் இலாகா.
3. சோக்கூன்சான்-சட்டசபை மெம்பர்-பார்லிமெண்டரி காரியதரிசி-ஷிரன் தரப்பு இலாகா.
4. போமூஅவுங்-சட்டசபை மெம்பர்-உபதலைவர்-அகில பர்மா விவசாயி கள் சங்கம் தலைமைக் காரியாலயம், 4, விங்கபா ரோட், இரங்கூன்.
5. தக்கீன் தெயிங்மவுங்-சட்டசபை மெம்பர்-மேல்சபை-வெயன் காரிய தரிசி-அகில பர்மா விவசாயிகள் சங்கம் தலைமைக் காரியாலயம், 4, விங்கபாரோட், இரங்கூன்.
6. சோமவுங்செயிங்-சட்டசபை மெம்பர்-1, சோட்டேலேன், ஊஹ்லாகீ தெரு, அல்லோன், இரஙகூன்.
7. தக்கீன் பாத்தே-சட்டசபை மெம்பர்-157, 47 வது தெரு, மேல் வீடு, இரங்கூன்.
8. ஊவபேஅவுங்-செட்டில்மெண்டு ஆபீசர், பியாப்பம், இரங்கூன்.
9. ஊபாவின், பி. எஸ். ஸி., பி. எல்., 44, பார்தெரு, இரங்கூன்.
10. சொ. சுப. சுப்பிரமணியன் செட்டியார்—செட்டியார்கள் சங்கம், 74, முகல் தெரு, இரங்கூன்.

இந்தப் புதுக் கமிட்டி முதலாவது தடவையாக 21-3-53ல் யன்று கூடிற்று. கூடி புது மெம்பர்கள் எல்லோருக்கும் முந்திய விபரங்கள் தெரியவேண்டி எற்கனவே நடந்த கூட்ட நடவடிக்கைகள், மற்ற நோட்ஸ் முதலியவைகளுக்கு நகல்கள் தயார் செய்து வழங்கப்பெற்றன. பிறகு 18-7-53ல் யன்று மீண்டும் கூடி முந்திய தலைவர் தக்கீன்கீட்மவுங் செய்ததுபோலவே விரிவான கேள்விகள், ஆராய்ச்சிகளுடன் கமிஷனின் வேலைகளைச் செய்வதா என்பதை முடிவு கட்ட வேண்டி நிலம் தேசியமாக் கும் சட்ட ஷரத்துகள் பரிசிலனை செய்யப் பெற்றன. சட்டத்தின் 7 வது செக்ஷன் 3 வது 4 வது சப் செக்ஷன்களில் கண்டபடி 1. நிலத்தின் தரா தரம் 2. நிலம் ஒருவரிடத்தில் இருந்த கால அளவு 3. அதனல் அவர்கள் அடைந்த சௌகரியங்கள் 4. அதற்குள்ள அடக்கம், எற்பட்ட செலவு கள் 5. நிறுவப்பெற்ற சீர்திருத்தங்கள், இவைகளை விசாரித்து அதை அனு சரித்து நஷ்டயீட்டைத் தீர்மானம் செய்வதானல் இயலாத காரியம் என்ற அபிப்பிராயம் எற்பட்டது. இதை ஆராய்ந்து முடிவு கட்ட வேண்டி கமி ஷன் இரண்டு இடங்களுக்குப்போய் பலரையும் விசாரணை செய்வதென்று யோஜனை செய்து விசாரணையில் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயங்களுக்கு ஒரு கேள்வித்தாள் தயார் செய்யப் பெற்றது. பிறகு 27-7-53ல் கூட்டம் கூடிக் கேள்வித்தாள் பரிசிலனை செய்யப் பெற்று ஒப்புக்கொள்ளப் பெற்ற பிறகு 29-7-53ல் இன்சீன் ஜில்லா தக்கிக்கும் 7-8-53ல் பக்கோவிற்கும் போய்ப் பல சிறிய, பெரிய, பர்மிய, இந்திய

நிலச்சுவாந்தார்களை விசாரணை செய்து வந்தனர். விசாரணையில் எல்லோரும் மேற்கண்ட விஷயங்களுக்குப் பதில் சொல்வது சாத்தியமில்லை எனவே தெரிவித்ததால் கமிஷன் மீண்டும் 8-8-53உ கூட்டம் கூடி நிலம் தேசிய மாக்கும் சட்டம் 7 வது செக்ஷன் 3 வது 4 வது சப் செக்ஷன்கள்படி விசாரணை செய்த நஷ்ட யீட்டை நிர்ணயிப்பது சாத்தியமில்லை எனவும் சட்டத்தை உகந்த முறையில் திருத்தித் தரும்படியும் சர்க்காரைக் கேட்டுக் கொள்வதாக தீர்மானம் செய்து அனுப்பிவைத்தனர். மேலும் 11-8-53உ யன்று நிலம் தேசியமாக்கும் இலாகா மந்திரி தக்கின் டின் அவர்களையும் பேட்டி கண்டு விபரங்கள் தெரிவித்தனர். அவர் பூராவும் விபரமாகக் கேட்டுக் கொண்டு அதுபோல் சட்டத்தைத் திருத்த ஏற்பாடு செய்வதாக வும் உறுதி கூறினார்.

சட்டம் திருத்தப் பெற்று நிலச்சுவாந்தார்களுக்கு இந்த அதிகப் படியான கேள்விகள் மூலம் ஏற்படும் இன்னல்கள் விலகுமென நினைக் கிறோம்.

நில விற்பனை:- நிலம் தேசியமாக்கும் சட்டம் பர்மா யூனியன் பூராவிலும் அமுலுக்கு வந்துள்ளதால் டன்னி, பழமரத்தோட்டங்கள், பூந் தோட்டங்கள், ரப்பர், இவைகள் பயிர் செய்யப்படும் நிலங்கள் தவிர மற்ற நிலங்களை ஈடுவைக்கவோ, விற்கவோ, மற்ற நபர்கள் அல்லது மதசம்பந்த மான ஸ்தாபனங்கள் அல்லது மத சம்பந்தமான நபர்கள் இவர்களுக்கு மாற்றவோ இணங்காது.

ஆனால் ஏற்கனவே நிலப்பிரச்னைகள் பற்றிய சட்டங்கள் வெளியாக ஆரம்பித்ததிலிருந்தே நில விற்பனைகளில் மிகவும் தடை ஏற்பட்டு விட்டது, அது சம்பந்தமான புள்ளிவிபரங்களைக் கீழே தருகின்றோம்.

பர்மா பருவங்கள், விளைவு விபரங்கள் ரிப்போர்ட்.

1. 1947ம் வருடம் ஜூன் மாதம் 30உ வரையுள்ள வருடம் ஒன்றுக்கு.

கீழ் பர்மாவிலுள்ள முக்கிய நெல்விளையும் பதின்மூன்று ஜில்லாக் களில் குறிப்பிட்ட வருஷத்தில் விவசாயிகளல்லாதவர்கள் கையிலிருந்த நிலங்களில் 36,530 ஏக்கர்கள் குறைந்துள்ளன. செட்டியார்கள் கையி லிருந்த நிலங்களில் 12,740 ஏக்கர்கள் குறைந்துள்ளன. அதாவது அவர் களின் மொத்த நிலங்களில் 100 க்கு 0.52 சதவிகிதம் குறைந்துள்ளது. இதில் ஹந்தாவாடி ஜில்லா விற்பனைதான் பிரதானம். இன்சீனில் லேசான கூடுதலும் ஏற்பட்டது. முக்கிய நெல்விளையும் ஜில்லாக்களில் விவசாயிக ளல்லாதவர்கள் கையிலுள்ள விளைவு நிலங்களின் விகிதம் 52 சதமாகும். இந்தப் பதின்மூன்று ஜில்லாக்களில் விவசாயிகளல்லாதவர்களிடம் உள்ள மொத்த ஏக்கர்கள் 5,016,051 ல் 2,416,628 ஏக்கர்கள் அதாவது 48 சதவிகிதம் செட்டியார்கள் கையிலிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2. 1948ம் வருடம் ஜூன் மாதம் 30உ வரையுள்ள வருடம் ஒன்றுக்கு.

கீழ் பர்மாவிலுள்ள முக்கிய நெல்விளையும் பதின்மூன்று ஜில்லாக் களில் குறிப்பிட்ட வருடத்தில் விவசாயிகளல்லாதவர்கள் கையிலிருந்த

நிலங்களில் 10,882 ஏக்கர்கள் குறைந்துள்ளன. செட்டியார்கள் கையிலிருந்த நிலங்களில் 29,242 ஏக்கர்கள் குறைந்துள்ளன. அதாவது அவர்களின் மொத்த நிலங்களில் 100 க்கு 1.2 சதவிகிதம் குறைந்துள்ளது. மியாங்மியா ஜில்லா விற்பனைதான் பிரதானம். முக்கிய நெல்விளையும் ஜில்லாக்களில் விவசாயிகளல்லாதவர்கள் கையிலுள்ள விளைவு நிலங்களின் விகிதம் 51.6 சதமாகும் இந்தப் பதின்மூன்று ஜில்லாக்களில் விவசாயிகளல்லாதவர்களிடம் உள்ள மொத்த ஏக்கர்கள் 5,005,169 ல் 2,390,898 ஏக்கர்கள் அதாவது 47.8 சதவிகிதம் செட்டியார்கள் கையிலிருப்பதாகத் தெரிவிககப்படுகிறது.

3. 1949ம் வருடம் ஜூன் மாதம் 30உ வரையுள்ள வருடம் ஒன்றுக்கு.

கீழ் பர்மாவிலுள்ள முக்கிய நெல்விளையும் பதின்மூன்று ஜில்லாக்களில் ரிப்போர்ட் வந்து சேராத புரோம் ஜில்லா நீக்கி மற்ற பனிரண்டு ஜில்லாக்களில் விவசாயிகளல்லாதவர்கள் கையிலிருந்த நிலங்களில் 34,218 ஏக்கர்கள் குறைந்துள்ளன. செட்டியார்கள் கையிலிருந்த நிலங்களில் 15,086 ஏக்கர்கள் குறைந்துள்ளன. அதாவது அவர்களின் மொத்த நிலங்களில் 100 க்கு 0.7 சதவிகிதம் குறைந்துள்ளது. விற்பனையில் சந்தட்டா, பாஸியன் ஜில்லாக்களில் முறையே 7000, 4000 ஏக்கர்கள் தெரிவிக்கப்பெற்றுள்ளன. விவசாயிகளல்லாதவர்கள் கையிலுள்ள விளைவு நிலங்களின் விகிதம் 52.2 சதமாகும். விவசாயிகளல்லாதவர்களிடம் உள்ள மொத்த ஏக்கர்கள் 4,840,006 ல் 2,323,483 ஏக்கர்கள் அதாவது 48 சதவிகிதம் செட்டியார்கள் கையிலிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

4. 1950ம் வருடம் ஜூன் மாதம் 30உ. வரையுள்ள வருடம் ஒன்றுக்கு.

கீழ் பர்மாவிலுள்ள முக்கிய நெல்விளையும் பதின்மூன்று ஜில்லாக்களில் குறிப்பிட்ட வருஷத்தில் விவசாயிகளல்லாதவர்கள் கையிலிருந்த நிலங்களில் 31,723 ஏக்கர்கள் குறைந்துள்ளன. செட்டியார்கள் கையிலிருந்த நிலங்களில் 11,630 ஏக்கர்கள் குறைந்துள்ளன. அதாவது அவர்களின் மொத்த நிலங்களில் 100 க்கு 0.5 சதவிகிதம்குறைந்துள்ளது. விற்பனையில் ஹந்தாவாடி, மியாங்மியா, தட்டோன் ஜில்லாக்களில் முறையே 4000, 3000, 2000 ஏக்கர்கள் தெரிவிக்கப் பெற்றுள்ளன. விவசாயிகளல்லாதவர்கள் கையிலுள்ள விளைவு நிலங்களின் விகிதம் 51 சதமாகும். விவசாயிகளல்லாதவர்களிடம் உள்ள மொத்த ஏக்கர்கள் 9,549,298 ல் 2,362,577 ஏக்கர்கள் அதாவது 47.8 சதவிகிதம் செட்டியார்கள் கையிலிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிலச் சேவா:-நிலச்சேவா வசூல் முன்னிலிருந்து கொஞ்சம் சீர்திருந்தியிருக்கிறது. குழப்பங்கள் குறைந்து வருவது ஒரு காரணம். ஏற்கனவே தெரிவித்துள்ளபடி குடியாண்மை விநியோக விதிகளில் "தகுந்த காரணங்களில்லாமல் முந்திய வருஷத்து ஸ்டாண்டர்டு சேவாவையோ அல்லது விவசாயக்கடனையோ கொடுக்கத் தவறுத நபர்கள் உழுதுவரும் நிலங்களை அவர்களே தொடர்ச்சியாக வேளாண்மை செய்ய அனுமதிக்கப்பெறுவர்", என்ற ஷரத்து இருப்பது மற்றொரு காரணம். முன்

விக்கொண்டு திருப்பிக் கொடுப்பது. இவைகளுக்குப் பர்மிய சர்க்கார் கீழ்க்கண்ட விதம் பதில் தெரிவித்தார்கள். 1. ஏற்கனவே 1948-49 ம் வருஷம் வரை பொதுவாக வரிகளைத் தள்ளுபடி செய்துவிட்டபடியால் இனிமேல் பொதுவான வரித்தள்ளுபடிகளைப் பற்றி யோசனை செய்ய முடியாது. சேவா வசூலாகவில்லையென்பது வரிவஜாவிற்கு தகுந்த காரணமில்லை என்ற கொள்கை தவறாது கடைப்பிடிக்கப்படும். 2. வரிக்கட்டத் தவறியவர்களின் பேரில் உள்ள நடவடிக்கைகளை காலவரையில்லாது நிறுத்தி வைத்துக்கொள்ள இணங்காது. ஆனால் தக்க காரணங்களுள்ள கேஸ்களைக் கவனிக்கக் கூடும். இதுபற்றிய மனுக்களை அந்தந்த டிபுடி கமிஷனர்களிடம் சமர்ப்பிக்கலாம். 3. நிலச் சேவா வசூலுக்கும் வரிக்கும் சம்பந்தமில்லை. நிலச்சுவாந்தார்கள் வரிக்கட்டவில்லையானால் விவசாயிகளிடம் வசூலிக்க முயற்சிக்கப்படும். விவசாயிகளிடமும் வசூலாகவில்லையானால் வரிப்பாக்கி நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஆனால் சம்பந்தப்பட்ட கமிஷனரின் சம்மதமில்லாது நிலங்கள் ஏலம்போடப்படமாட்டாது.

இந்தப் பதில் இந்தியன் எம்பசி மூலம் நமக்குக் கிடைத்தவுடன் நாம் இந்தியன் எம்பசிக்கு கீழ்க்கண்ட விபரப்படி நீண்ட கடிதம் ஒன்று எழுதினோம். அதில் கண்ட முக்கிய விஷயங்கள் வருமாறு:—

1. நாங்கள் பர்மிய சர்க்காருக்கு 1948-49 ம் வருஷம் வரை உள்ள வரிப்பாக்கிகளை தள்ளுபடி செய்ததற்கு நன்றி செலுத்துகிறோம். இப்போது நாங்கள் பூரா வரித் தள்ளுபடியைக் கோரவில்லை. நிலச்சேவா வசூல் செய்ய இணங்காத இடங்களில் வரித்தள்ளுபடி செய்யவேண்டுமென்றுதான் கோருகிறோம். நிலச் சேவா வசூலாகாத காரணம் வரிவஜாவிற்குத் தகுந்த காரணமாகமாட்டாது என்பது முந்திய நடவடிக்கைகளுக்குப் பொருத்தமானதாக இருந்திருக்கலாம், ஆனால் இப்போது கிராமக் குடியாண்மை விநியோகக் கமிட்டிகள் நிலங்களை சேவா வசூல் செய்யும் பொறுப்போ, அக்கறையோ இல்லாமல் அடைக்க ஆரம்பித்ததிலிருந்து நிலச்சேவா வசூலாகாத காரணம் ஒரு அவசியமான காரணமாக ஏற்படுகிறது. தவிர குழப்பக்காரர்கள் ஆதிக்கத்திலிருந்து நிலச்சுவாந்தார்களோ அல்லது அரசாங்கத்தின் பிரதிநிதிகளோ போய்வர இணங்காத பிரதேசங்களுக்கும் கூட இப்போது திரும்பப்பிடித்த பிறகு முந்திய வரிப்பாக்கிகளை வசூல் செய்ய முயற்சிகள் நடக்கிறது. அவ்விதம் சேவா வசூல் நடைபெறாமலிருப்பதும் தகுந்த காரணமாகும். 2. வரிப்பாக்கி நடவடிக்கைகளை நிறுத்தி வைத்துக்கொள்ள இணங்காதது பற்றி சர்க்கார் எழுதியிருப்பதைப் பார்த்துக்கொண்டோம். அவர்கள் தனித்தனிக்கேஸ்களைக் கவனித்துச் செய்வதாகத் தெரிவித்திருப்பது பற்றி நாங்கள் நன்றி செலுத்துகிறோம். நியாயமான கேஸ்களில் வரித்தள்ளுபடி செய்து பாக்கி கேஸ்களில் வசூல்செய்வது பொருத்தமாயிருக்குமெனத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். 3. வரிக்காக ஏலம்போட்டு சர்க்காரில் எடுத்துவைத்திருக்கும் நிலங்களைத் திருப்பித் தரவேண்டுமென கோரியுள்ளதுபற்றி சர்க்காரின் பதில் விளக்கமாக இல்லை. பல சந்தர்ப்பங்களில் நிலச்சுவாந்தார்களுக்குத் தெரியாமலோ அல்லது அவர்களின் பேரில் தவறில்லாமலோ நிலங்கள் ஏலம்போய்விடுவதால் அவர்கள் பாக்கியைக் கட்டுவதாக மனுச் செய்யும்பொழுது நிலத்தைத் திருப்பிக்கொடுப்பதுதான் நியாயமாகும். இவ்விதம் எழுதியுள்ள விளக்கங்களுக்கு இன்னும் பதில் கிடைக்கவில்லை.

குடியாண்மை விநியோகச் சட்டம்-1948, ஸ்டாண்டர்டு சேவாச் சட்டம் 1950, இவைகளின் பேரில் கோர்ட்டுகளில் நடவடிக்கைகள்:—குடியாண்மை விநியோகச் சட்டம், ஸ்டாண்டர்டு சேவாச்சட்டம் இவைகள் பர்மா அரசியல் நிர்ணயச் சட்டத்தின் 23 வது செக்ஷனுக்கு முரணானது. ஆகையால் செல்லுபடியாகத் தகுந்தவைகளில்லை என்ற காரணத்தைக் கண்டு கூஞ்சாங்கோம் சா. ராம. அரு. ராம கடைக்காக மேற்படி ஏஜண்டு வீ. பழனியப்ப செட்டியார் வாதியாகவும் 1. பேக்கோன் கிராமக் குடியாண்மை விநியோகக் கமிட்டித் தலைவர் தக்கி கொய்யுவே 2. விவசாயி கொத்தாட்டுவே, இவர்கள் இருவரும் பிரதிவாதிகளாகவும் ஹந்தரவாடி அடிஷனல் டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் 1953 ம் வருஷத்திய 1ம் நிம்பர் கேசாக நம் சங்கச் செலவில் 17-1-53ல் பிராது தாக்கல் செய்தோம். மேற்படி கேசில் பிரதிவாதிகளுக்கு நோட்டீஸ்கள் அனுப்பி அவர்கள் ஆஜராகாததால் எக்ஸ்பார்ட்டி விசாரணைக்கு தேதி குறிப்பிடப்பட்டது. நிற்க, மேற்படி கேசில் சட்டங்களைப் பற்றிய பாயிண்டுகள் இருக்கிறபடியால் அவைகளை முடிவு செய்யக்கூடிய அதிகாரம் உள்ள ஹைக்கோர்ட்டார் அந்தப் பாயிண்டுகளைப் பற்றிய விசாரணை செய்து முடிவு சொல்லவேண்டுமென்று ஹைக்கோர்ட்டில் மனுத் தாக்கல் செய்தோம். அதன் பேரில் கேஸ் கட்டுகளை ஹைக்கோர்ட்டுக்கு வருத்தி ஹைக்கோர்ட்டிலிருந்தும் பிரதிவாதிகள் இருவருக்கும் நோட்டீஸ்கள் அனுப்பித்தார்கள். அதற்கும் அவர்கள் ஆஜராகவில்லை. சட்டத்தின் நியாயத்தைப் பற்றிய விஷயமாகையால் சர்க்கார் தரப்பில் அட்டார்னி ஜெனரலுக்குத் தகவல் கொடுத்து அவர்கள் தரப்பைக் கேட்க வேண்டிய அவசியயிருப்பதால் அட்டார்னி ஜெனரலுக்கு நோட்டீஸ் அனுப்பும்படி ஹைக்கோர்ட்டில் ஆர்டராகியிருக்கிறது. நோட்டீஸ் அனுப்பி, ஆர்குமெண்ட் நடந்து, சட்டசம்பந்தமான முடிவு ஏற்பட்டவுடன் கேஸ்கட்டு கீழ்க்கோர்ட்டுக்கு அனுப்பப்பெறும்.

நிற்க, குடியாண்மை விநியோகச் சட்டம், 1948 ஐ ரத்துச்செய்து, 1953 ம் வருஷத்தில் வேறொரு குடியாண்மை விநியோகச் சட்டம் நிறைவேற்றியிருக்கிருர்கள். அந்தச் சட்டத்தில் கிராமக் குடியாண்மை விநியோகக் கமிட்டிகளின் பேரில் பிராதுபோட இணங்காது என்ற ஷரத்தும் சேர்க்கப்பெற்றிருக்கிறது. ஆகையால் புதுச் சட்டத்தின்பேரில் நம் கேசைத் தாக்கல் செய்வதற்காகவும், சட்டத்தை அனுசரித்து பிளைண்டை மாற்றுவதற்காகவும் ஆலோசனைகள் செய்யப்பெற்று வருகின்றன.

கேஸ் தொடர்ந்து நடந்து, கூடிய சீக்கிரம் ஒரு முடிவு கிடைக்குமென நம்புகிருேம்.

மற்ற ஸ்தாபனங்கள்.

நம் சங்க இந்திய ஆலோசனைக் கமிட்டி:—நம் சங்க இந்திய ஆலோசனைக் கமிட்டியாரும் முன் வருஷங்களைப் போலவே பொதுவாக பர்மா சம்பந்தமான பல முக்கிய பிரச்னைகளிலும் விசேஷமாக நம்மவர்கள் சம்பந்தமான எல்லாப் பிரச்னைகளிலும் மிகுந்த அக்கரை எடுத்துக்கொண்டு கவனித்து ஆவன செய்து வருகிருர்கள்.

பிரதமர் தக்கின் நூ அவர்கள் இந்தியா சென்றிருந்த சமயம் ஆலோசனைக் கமிட்டி உபதலைவர் திரு. அ. மு. மு. முருகப்ப செட்டியாரவர்களும் மெம்பர் திரு. ஆர். ராமனுதன் செட்டியாரவர்களும் 28-11-53உ யன்று அவர்களைப் பேட்டி கண்டு 50 ஏக்கர்கள்வரை நிலங்களை விவசாயிகளுக்கு விற்க அனுமதி அளிக்க வேண்டுமென வற்புறுத்திச் சொன்னார்கள். பிறகு ஊநூ அவர்களின் ஆலோசனையின் பேரில் டெல்லியிலுள்ள பர்மியத் தூதுவர் மூலம் 9-1-52உ யில் ஒரு நீண்ட மெமோரண்டம் சமர்ப்பித்தார்கள். மேலும் நம் சங்கப் பொருளாதார நிலைமை மிகவும் சீர்கேடடைந்திருந்தபொழுது ஆலோசனைக் கமிட்டியார் ஒருமுறைக்கிருமுறையாக முயற்சி செய்து கூட்டங்கள் கூட்டுவித்துத் தீர்மானங்கள் செய்து கம்பை தனவைசியர் கல்விக் கழகத்திலிருந்து நமக்குப் பொருளுதவி செய்யும்படி கோரிக்கைகள் விடுத்தார்கள். அவர்கள் முயற்சியால் நமக்குக் கல்விக் கழகத்திலிருந்து ரூபாய் 25,000 வரை கடனுகத் தந்து வாங்கிக்கொள்வதென்ற ஏற்பாடு முடிவாயிற்று. பல சந்தர்ப்பங்களில் மத்திய அரசாங்கத்திற்கும் சென்னை அரசாங்கத்திற்கும் கடிதங்கள் மூலமும் நேரிலும் நம் குறைகளைத் தெரிவித்து வேண்டியன செய்து வருகிறார்கள்.

நம் ஆலோசனைக் கமிட்டித் தலைவர் திரு. ராஜாசர் மு. அ. முத்தையா செட்டியாரவர்களும் உபதலைவர் திரு. அ. மு. மு. முருகப்ப செட்டியாரவர்களும் கூட்டுக் காரியதரிசிகள் திரு. க. வெ. ராம. அழகப்பசெட்டியாரவர்கள், திரு. சொ. மு. ராம. சோலையப்ப செட்டியாரவர்கள் இவர்களும் மிகவும் பிரயாசை எடுத்துக் கொண்டு நம்மவர்களின் பிரச்னைகளைக் கவனித்து வருவதால் நமக்குப் பல நன்மைகள் கிடைக்கக் கூடுமென்று எதிர்பார்க்கிறோம். கமிட்டிக்கு நமது நன்றி உரித்தாகுக.

நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் தர்ம ஸ்தாபன சங்கம்:-பர்மா நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் சங்கத்து இந்திய ஆலோசனைக் கமிட்டியின் பெருமுயற்சியால் நாட்டுக் கோட்டை நகரத்தார்களின் தர்ம ஸ்தாபன சங்கம் கர வருடம் வைகாசி மாதம் 23உ (6-6-51) செட்டிநாட்டில் நடந்த நகரத்தார்களின் பொதுக்கூட்டத்தில் உருவாயிற்று. பிறகு மேற்படி சங்கத்திற்குச் சட்டதிட்டங்கள் தயார் செய்யப்பெற்று 12-7-52உ யில் புதுக்கோட்டை அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்டிராரிடம் சொசைட்டி ரிஜிஸ்டரேஷன் சட்டப்பிரகாரம் பதிவு செய்யப் பெற்றது. அதன் உத்தியோகஸ்தர்களும், காரியக்கமிட்டி, நிர்வாகக் கமிட்டி மெம்பர்களும் வருமாறு:—

ராஜாசர் மு. அ. முத்தையா செட்டியார், செட்டிநாடு, நைட், பி. ஏ., எம். எல். ஏ.,	தலைவர்
திரு. க. வெ. ராம. அழகப்ப செட்டியார், காரைக்குடி காத்தான்	காரியதரிசிகள்.
,, சொ. மு. ராம. சோலையப்ப செட்டியார், பள்ளத்தூர்	
,, ஏ. மு. முத்தப்ப செட்டியார், புதுவயல்	பொக்கிஷதாரர்கள்.
,, ப. வ. ராம. குழந்தையன் செட்டியார், ராயவரம்	
,, முத்து கரு. அரு. கரு. அருணசலம் செட்டியார், தேவகோட்டை	காரியக்கமிட்டி

,,	ராவ்பகதூர் ராம. அரு. லெ. லெட்சுமணஞ் செட்டியார், கொத்தமங்கலம்	காரியக்கமிட்டி
,,	வீ. தெ. வீரப்ப செட்டியார், கண்டனூர்	,,
,,	சுப. க அ. ராம. ராமநாதன் செட்டியார், சோளபுரம்	,,
,,	கூ. அரு. க. சுப. சுப்பிரமணியன் செட்டியார், கீழப்பூங்குடி	,,
,,	ராம. பெ. அள. அழகப்ப செட்டியார், கோட்டையூர்	,,
,,	அ. மு. மு. முருகப்ப செட்டியார், பள்ளத்தூர்	,,
,,	அரு சேவு. கருப்பன் செட்டியார், நாட்டரசன்கோட்டை	நிர்வாகக்கமிட்டி
,,	வெ. பெரி. பள. காசிவிஸ்வநாதன் செட்டியார், பாகனேரி	,,
,,	உல. கயி. கண. கண்ணப்ப செட்டியார், சக்கந்தி	,,
,,	சி. கரு. சி. ராம. கரு. கருப்பன் செட்டியார், ஒக்கூர்	,,
,,	சுப. கண. சுப. முத்துராமன் செட்டியார், மதகுபட்டி	,,
,,	பி. நா. சிவ. லெ. லெட்சுமணன் செட்டியார், அலவாக்கோட்டை	,,
,,	பி. கு. நா. பெரியகருப்பன் செட்டியார், விஸ்வநாதபுரம்	,,
,,	மு. பெ. மு. சா. சாமிநாதன் செட்டியார், புதுப்பட்டி	,,
,,	வ. நா. அ. நாகப்ப செட்டியார், ராங்கியம்	,,
,,	ராம. ப. மெ. சொக்கலிங்கம் செட்டியார், காரைக்குடி	,,
,,	சொ. மு. அ மெ. ராமசாமி செட்டியார், பள்ளத்தூர்	,,
,,	அ. க. அ. சித அள. சிதம்பரம் செட்டியார், கோட்டையூர்	,,
,,	சி. ராம. ராமசாமி செட்டியார், கண்டனூர்	,,
,,	ராம. கும. சு. குமரப்ப செட்டியார், பலவான்குடி	,,
,,	க. வெ. ராம. ராமசாமி செட்டியார், கானாடுகாத்தான்	,,
,,	சி. ராம. மு. லெ. லெட்சுமணன் செட்டியார், கொத்தமங்கலம்	,,
,,	மு. அள. முரு. பெரி. பெரியகருப்பஞ் செட்டியார், கீழச்சிவல்பட்டி	,,
,,	கி. நா. ராம. நாகப்ப செட்டியார், கோனாபட்டு	,,
,,	அள. அரு. ராம. வெ. சோமநாதன் செட்டியார், தேவகோட்டை	,,
,,	தெ. நா. தெ. அண்ணாமலை செட்டியார், குழிபிறை	,,

இந்தச் சங்கத்தின் முக்கிய நோக்கமாவது நகரத்தார்களால் ஏற்படுத்தப் பெற்று சந்தர்ப்பபேதங்களால் சரியாக உபயோகப்படுத்தாமல் அல்லது கவனிக்கப் பெருமலிருக்கும் தருமங்களையும், சேதப்படக்கூடிய அல்லது சமூகத்திற்குக் கிடைக்காமல் நஷ்டமாகக்கூடிய தருமங்களையும் ஒப்புக்கொண்டு கண்காணித்தலாகும்.

இதற்கு பர்மாவில் ஒரு பிரதேசக்கமிட்டி ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதற்கு வேண்டிய பொருளுதவியை நம் சங்கத்திலிருந்து கடனாகப் பெற்றுக்கொள்வதென்றும் தெரிவித்திருக்கிறார்கள். இவடத்திலுள்ள சூழ்நிலையாலும் பொருளுதவி கிடைப்பதில் ஏற்படும் சுணக்கத்தாலும் பிரதேசக்கமிட்டியின் வேலைகள் இன்னும் துவக்கப் பெறவில்லை.

சகோதர சங்கங்கள்

அகில உலக வர்த்தக சங்கம் பாரிஸ்:—இச்சங்கத்தின் தலைமை ஸ்தாபனம் பிரான்ஸ் தேசத்தில் பாரிசிலும் இதன் இந்தியக் கிளை ஸ்தாபனம் புதுடெல்லியிலும் இருந்து வருகின்றன. அதில் பலவருஷங்களாக நம் சங்கம் வருஷம் ஒன்றுக்கு ரூ. 100 சந்தாச்செலுத்தி அங்கம் வகித்து வருகிறது. மேற்படி சங்கத்தின் அறிக்கைகள், வெளியீடுகள் எல்லாம் தவறாமல் நமக்குக் கிடைத்து வருகின்றன.

அகில இந்திய வியாபார சங்கங்களின் சம்மேளனம், புதுடெல்லி:— ஷை சபையில் நாம்முதலில் வருடம் ஒன்றுக்கு ரூ. 500 சந்தாச் செலுத்தி சாதாரண மெம்பராகவும் பிறகு 1948-ம் வருஷம் முதல்சந்தா இல்லாத அசோஷியேட் மெம்பராகவும் இப்போதும் 1951-ம் வருஷம் முதல் சந்தா இல்லாது அயல்நாட்டு மெம்பர்கள் என்ற ஸ்தானத்திலும் அங்கம் வகித்து வருகிறோம். அவர்களின் அறிக்கைகள், வெளியீடுகள் எல்லாம் நமக்குக் கிடைத்து வருகின்றன. சமீபத்தில் அவர்களின் 25-வது வருஷ வெள்ளிவிழாவைக் கொண்டாடினார்கள்.

அகில பர்மா இந்தியன் காங்கிரஸ்:—இந்த ஸ்தாபனத்தின் ஆறுவது வருஷாந்திர மகாநாடு 18-4-53, 19-4-53-உ களில் இரங்கூனில் புதுவருஷத் தலைவர் திரு. ஹெச். சுப்பிரமணியம் எம். ஏ., எல். எல். பி., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்வருஷமும் நம்மவர்கள் மெம்பர்களாகச் சேர்ந்து கட்டடங்களில் கலந்துகொண்டார்கள், மகாநாட்டில் பல முக்கியமான தீர்மானங்கள் நிறைவேறின. அவைகளில் முக்கியமானவை பர்மாவில் இந்தியர்கள் அதிகமாக வசிக்கும் நகரங்களாகிய மாந்தலே, மோல்மேன், பாசியன், டவுங்கி, மிச்சினு ஆகிய இடங்களில் இந்திய சர்க்காரின் வைஸ் கான்சல்கள் நியமிக்கப்பெறவேண்டுமென்றும், பர்மா இமிகிரேஷன் சம்பந்தமாக மாந்தலேயில் ஒரு ஆபீஸ் ஏற்படுத்தியதற்கு பர்மிய சர்காருக்கு வந்தனம் தெரிவிப்பதுடன் இரங்கூன் தலைமை ஆபீசில் பல மனுக்கள் அதிகமாக சுணக்கப்படுகிற விபரத்தை எடுத்துக்காட்டி இமிகிரேஷன் விதிகள் ஏற்படுத்த வேண்டிய அவசியத்தை வற்புறுத்தி இமிகிரேஷன் மனுக்கள் தயார்செய்வது, விபரங்கள் தெரிந்த ஸ்தாபனங்கள் மூலம் செய்யப் பெறுவதுதான் பொறுத்தமென்றும் ஆலோசனை கூறிச் செய்யப்பெற்றவையாகும்.

அகில பர்மா இந்தியன் காங்கிரஸ் தலைமைஸ்தாபனக் கௌன்சிலிலும், காரியக்கமிட்டியிலும் திரு சொ. சுப. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் மெம்பராக இருந்து வருகிறார்கள்.

அகில பர்மா இந்தியன் காங்கிரஸ் சார்பில் நடக்கும் பல வரவேற்புகள், விருந்துகளுக்கு நாமும் நன்கொடைகள் கொடுத்துக் கலந்துகொண்டு வருகிறோம். இரங்கூனில் நடந்த ஆசியசோஷலிஸ்ட் மகாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு 11-1-53-உ யன்றும், இந்திய ராணுவ யுத்தக் கப்பல் 'தீர்' உத்தியோகஸ்தர்களுக்கும் மற்ற பிரமுகர்களுக்கும் 23-2-53 உ யன்றும், இந்திய அரசாங்க வியாபார தூதுகோஷ்டித் தலைவர் ரபி அகமத் கித்வாய் அவர்களுக்கும் மற்ற தூதுகோஷ்டி அங்கத்தினர்களுக்கும் 19-4-53-உ யன்றும், இந்திய ராணுவ யுத்தக்கப்பல் 'ராணாவின்'

உத்தியோகஸ்தர்களுக்கும் மற்ற பிரமுகர்களுக்கும் 14-7-53-ட யன்றும் விருந்துகள் அளிக்கப்பெற்றன. இவைகளில் நம் அங்கத்தினர்கள் தாராளமாகக் கலந்துகொண்டனர்.

பர்மாவில் வசிக்கும் எல்லா இந்தியர்களுக்கும் பொதுவான ஸ்தாபனமாகிய அகில பர்மா இந்தியன் காங்கிரசுடன் நாம் மிகவும் தொடர்பு கொண்டு ஒத்துழைத்து வருகிறோம்.

இந்தியன் எஜுகேஷன் சொசைட்டி:—இச்சபையின் சார்பாக சென்ட்ரல் ஸ்கூல்ஒன்றும், விஸ்வபாரதி அக்காடமி என்ற பள்ளிக்கூடம் ஒன்றும் திறம்பட நடத்தப்பெற்று வருகின்றன. இதன் தலைவர் டாக்டர் டுகல் அவர்களும், காரியதரிசி திரு டாடாசான்ஜி அவர்களும் மிகுந்த பிரயாஸையுடன் இந்தியமாணவ மாணவிகளின் கல்வி அபிவிருத்தியைக் கவனித்து வருகிறார்கள். இவ்வருஷத்திலும் பலமாணவர்களைக் கல்கத்தாவுக்கு அனுப்பி அந்த யுனிவர்சிட்டியில் பரீட்சை எழுத ஏற்பாடு செய்து கொடுத்தார்கள். மேற்படி சொசைட்டியின் கவர்னிங் பாடியில் நம் சங்கத்திற்குள்ள ஸ்தானத்தில் திரு செ. சுப. சுப்பிரமணியன் செட்டியாரவர்கள் நம் பிரதிநிதியாக அங்கம் வகித்து வருகிறார்கள்.

அகில பர்மா தமிழர் சங்கம்:—பர்மாவிலுள்ள தமிழர்களுக்கெல்லாம் பொதுவான இச்சங்கம் 13-3-52-ட யன்று துவக்கப்பெற்று சாதி மத பேதமின்றி வழக்கமாகத் தமிழ்பேசும் சமூகத்தினர் அனைவரையும் அங்கத்தினர்களாகக் கொண்டு முதல்த்தலைவர் திரு ஆர். எம். ராமலிங்கத் தேவரவர்கள் தலைமையில் பொதுக்காரியதரிசி திரு வி. ஹெச். டேவிட் அவர்கள் முயற்சியுடன் திறம்பட நடத்தப் பெற்றுவருகிறது. இவ்வருஷத்தில் பல பெரிய காரியங்கள் செய்து முடித்தார்கள். சென்னை மாகாணத்தில் புயலடித்து மக்கள் சேதத்துடன் பல அவதிக்குள்ளானார்கள். அச்சமயத்தில் சென்னை மாகாண சர்க்காரும் மத்திய அரசாங்கமும் மக்களின் உதவிக்காக நிதிதிரட்டி அனுப்பும்படி வேண்டுகோள்கள் விடுத்தனர். அகில பர்மா தமிழர்சங்கத்தின் ஆதரவில் திரு. முருகப்பா அன்சன்ஸ் வீ. ராமன் செட்டியாரவர்கள் தலைமையில் ஒரு கூட்டுக் கமிட்டி ஏற்படுத்தப்பெற்றது. அக்கமிட்டியினர் சுமார் ரூ. 33,0°0-வரை வசூல் செய்து இவ்விடம் இந்தியன் எம்பசி மூலம் சென்னை மாகாண சர்க்காருக்கு அனுப்பிவைத்தனர். பிறகு ப. ச. ப. ல. குவெத்தட் என்ற இடத்தில் நெருப்பு விபத்து ஏற்பட்டு ஏராளமான மக்கள் உணவு, உடை, இருப்பிடம் இல்லாமல் தவித்தனர். அகில பர்மா தமிழர் சங்கத்தின் சார்பில் சிட்டிஹாலில் ஒரு கதம்பநிகழ்ச்சி ஏற்பாடுசெய்து சுமார் ரூ. 6000, 7000 வசூல் செய்து இரங்கூன் நகர மேயர் ஏற்படுத்திய நிதிக்கு அனுப்பிவைத்தனர். மீண்டும் ஒரு முறை 38-ம் நிம்பர் வீதிக்கடுத்து நெருப்புப் பிடித்து ஜனங்கள் அவதிக்குள்ளான பொழுது அகில பர்மா தமிழர் சங்கத்தின் சார்பில் பண்டூலா ஸ்கொயர் (ராணி தோட்டம்) வந்து தங்கி யிருந்த பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு நன்கொடைகள் மூலம் பணம், சாமான்கள் சேகரித்து சுமார் 10 தினங்கள் வரை இருமாக சாப்பாடு தயாரித்துக் கொடுத்தனர்.

அகில பர்மா தமிழர் சங்கத்தில் கல்வி அபிவிருத்தியிலும் மிகவும் கவனம் செலுத்தி வருகின்றனர். வாராவாரம் ஞாயிற்றுக்கிழமை பிற்

பகல்களில் இலக்கியமன்றக் கூட்டங்கள் நடத்திப் பல அரிய பெரிய விஷயங்களைப் பற்றி பிரசங்கங்களுக்கு ஏற்பாடு செய்து நடத்துகின்றனர். இம்முயற்சி சிறப்பாக சங்க உதவிக் காரியதரிசி திரு மு. முத்தராமலிங்கம்பிள்ளை அவர்களுடையது. சங்கத்தில் நம்மவர்கள் தாராளமாகக்கலந்து எல்லா அலுவல்களிலும் பங்கெடுத்துக் கொண்டு வருகின்றனர். அகில பர்மா தமிழர் சங்கம் நீடூழி வாழ்ந்து பர்மாவாழ் தமிழ் மக்களுக்கும் ஏனையோருக்கும் நன்மை பயக்கவேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.

பாரத் சேம்பர் ஆப் காமர்ஸ்:—ஷை ஸ்தாபனமும் இந்திய வியாபாரிகளை அங்கத்தினர்களாகக் கொண்டு வியாபார சம்பந்தமான பல பிரச்னைகளிலும் தங்கள் அபிப்பிராயங்களை இந்திய பர்மிய சர்க்காரின் பல இலாகாக்களுக்கும் தெரிவித்து ஆவன செய்து வருகிறார்கள். மிஸ்டர் ஜே. பி. சென்குப்தா அவர்களைத் தலைவராகவும் டாக்டர் பட்டேல் அவர்களைக் காரியதரிசியாகவும் கொண்ட அந்த ஸ்தாபனம் மிகவும் சீரிய முறையில் நடந்து வருகிறது. அவர்களின் அறிக்கைகள், வெளியீடுகள் நமக்கு இலவசமாகக் கிடைத்து வருகின்றன.

பர்மா நிலச்சுவாந்தார்கள் சங்கம்:.இச்சங்கமும் தான் மேற்கொண்ட வேலைகளை செவ்வனே செய்து நிலச்சுவாந்தார்கள் நலனுக்கு வேண்டிய முயற்சிகள் எடுத்து வருகிறது. பத்திரிகைகள் மூலமும் துண்டுப்பிரசுரங்கள் மூலமும் நிலச்சுவாந்தார்கள் நலன்களுக்கான பிரச்சாரங்களும் செய்து வருகிறது. இவ்வருஷத்திலும் பல கூட்டங்கள் கூடி நிலப்பிரச்னைகளைப் பற்றி விவாதித்து வேண்டியன செய்துள்ளார்கள். அவர்கள் கூட்டங்களில் நம் சங்கப் பிரதிநிதிகளும் அழைப்பின் பேரில் கலந்து கொண்டார்கள். நிலப்பிரச்னைகளில் நம் சங்கத்துடன் எல்லா வகையிலும் ஒத்துழைத்து வரும் அச்சங்கத்தை நாம் மிகவும் பாராட்டுகிறோம்.

அகில பர்மா ஹிந்து சென்ட்ரல் போர்டு:—பர்மா சர்க்காரில் மத சம்பந்தமான இலாகா ஒன்று ஏற்படுத்தப்பெற்று அதற்கு ஊவின் அவர்கள் மந்திரியாக இருந்து வருகிறார்கள். பர்மிய அரசாங்க கொள்கைப்படி பர்மாவிலுள்ள மக்கள் கொண்டாடும் மதங்களுக்கு எல்லாம் அவர்கள் ஆதரவு அளித்து வருகிறார்கள். அதேபோல் ஹிந்து மதத்திற்கும் ஆதரவு அளித்து வருடாவருடம் ஹிந்துமதப் பிரச்சாரத்திற்காக ஓரளவு தொகையும் கொடுத்துவருகிறார்கள். ஹிந்து மதத்தில் பல தனிப்பட்ட ஸ்தாபனங்களும், பொதுஸ்தாபனங்களும் இருந்தும் அகில பர்மாவையும் ஒன்று சேர்க்கக்கூடிய ஒரு பொது ஸ்தாபனம் இல்லாதிருந்தபடியால் சர்க்காரின் ஆலோசனைப்படி அகில பர்மா ஹிந்து சென்ட்ரல் போர்டு ஸ்தாபிக்கப்பெற்றது. அதில் ஹிந்துமதக் கோவில்கள், மடங்கள், சங்கங்கள் முதலிய பொதுஸ்தாபனங்களும் ஹிந்து மதத்தில் எந்தப் பகுதியையும் தழுவிய நபர்களும் அங்கத்தினர்களாகயிருந்துவருகிறார்கள். அதன்சட்டதிட்டங்களை நிறைவேற்றி அச்சடித்துப் பிரசுரித்திருக்கிறார்கள். அதன் முதல் தலைவர் ஸ்ரீ ராமகிருஷ்ணமிஷன் சொசைட்டிக் காரியதரிசி ஸ்ரீ அருக்தானந்தா சுவாமிஜி அவர்கள். காரியதரிசி ஸ்ரீ எஸ். கே. நாராயண அய்யர் அவர்கள். சர்க்கார் ஆதரவு பெற்ற இந்த ஸ்தாபனத்தின் மூலம் பர்மாவாழ் ஹிந்து மக்களுக்கு மத விஷயங்களில் பல முன்னேற்றங்கள் ஏற்படுமென நம்புகிறோம்.

தென்னிந்திய வர்த்தக சங்கம், சென்னை; நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் சங்கம், சென்னை; அகில மலேயா நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் வர்த்தக சங்கம், கோலாலம்பூர்; நாட்டுக்கோட்டை செட்டியார்கள் வர்த்தக சங்கம், சிங்கப்பூர், மலாக்கா, பினங்கு, மூவார்; நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் சங்கம், சைகோன், சிலோன்; முதலிய ஸ்தாபனங்களுடன் நாம் தொடர்பு கொண்டு அடிக்கடி கடிதப்போக்குவரத்துகள் நடத்தி வந்துள்ளோம். நம் பிரச்னைகளில் ஷை சங்கங்கள் அதிக சிரத்தை காட்டி வருகின்றன. அவர்கட்கு நமது நன்றி

தபால், தந்தி போக்குவரத்துச் சாதனங்கள்

தபால் கட்டணங்கள்:—அன்னிய நாட்டுத் தபால் கட்டணங்கள் ஏற்கனவே இருந்துவந்ததுபோல் இருந்துவருகின்றன. இந்தியாவுக்கு முதல் அவுன்ஸ்க்கு பியா 35ம் மறு ஒவ்வொரு அவுன்ஸ் அல்லது அதன் பகுதிக்கு பியா 20. மாக இருந்துவருகிறது. சாதாரணத் தபால் கட்டணத்துடன் ஆகாயத் தபால் கட்டணம் ஒவ்வொரு அரை அவுன்ஸ்க்கும் பியா 25. ஆகவே இருந்துவருகிறது. ஆக ஆகாயத்தபால்களுக்கு அரை அவுன்ஸ்க்கு 60. பியாவும், ஒரு அவுன்ஸ்க்கு 85. பியாவும் ஒட்ட வேண்டும். (ஒரு அவுன்ஸ் என்பது இரண்டரை ரூபாய் எடைக்குச் சமம்) ஏர் லெட்டருக்கு கட்டணம் பியா 50. ஏர்மெயில் கார்டுக்கு பியா 20. ரிப்ளை கார்டுக்கு பியா 40-ம் கட்டணமாகும். எல்லாத் தபால்களுக்கும் ரிஜிஸ்ட்ரேஷன் கட்டணம் பியா 25. அக்னாலெட்ஜ்மெண்ட் கட்டணம் பியா 19·

இவ்வருஷமுதல் ஆகாயத்தபாலில் புக் போஸ்ட் அனுப்ப வசதி ஏற்படுத்தியிருக்கிறார்கள். சாதாரண புக்போஸ்ட் கட்டணமாகிய, முதல் இரண்டு அவுன்ஸ்க்கு பியா 14-ம் மறு ஒவ்வொரு இரண்டு அவுன்ஸ், அல்லது அதன்பகுதிக்கு பியா 6. உடன் ஆகாயக்கட்டணம் ஒவ்வொரு அரை அவுன்ஸ்க்கும் 15 பியா ஒட்டவேண்டும். மணியார்டர்களுக்கு ஆகாயக்கட்டணம் பியா 40.

உள்நாட்டிற்கு ஒரு ரூபா எடையுள்ள தபாலுக்கு பியா 13. மறு ஒவ்வொரு ரூபா எடைக்கும் பியா 6. ஆகாயத் தபால்களுக்கு உபரியாய் ஒவ்வொரு ரூபா எடைக்கும் பியா 6. வீதம் சேர்த்துக்கொள்ளவேண்டும். போஸ்ட் கார்டு பியா 6. ரிப்ளைக்கார்டு பியா 12. புக்போஸ்ட்டு ஐந்து ரூபா எடைவரை பியா 5. மேல்கொண்டு ஒவ்வொரு ஐந்து ரூபா எடை அல்லது அதன் பகுதிக்கு பியா 3 வீதம் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

தந்திகள்:—பர்மாவிலுள்ள எல்லாத் தந்தி ஆபீஸ்களிலும் இங்கிலீஷ் பாஷையில் தந்திகள் கொடுக்கமுடியும். மேலும் கீழ்கண்ட தந்தி ஆபீஸ்களுக்கு பர்மிய பாஷையிலும் தந்திகள் கொடுக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவைகள் வருமாறு:—

RANGOON	MOULMEIN	MOGOK	MONYWA
MANDALAY	MERQUI	PROME	MYITKYINA
BASSEIN	KALEWA	SHWEBO	HENZADA
AKYAB	PAUNGBYIN	KYAUKSE	CHEDUBA
TOUNGOO	PAKOKKU	TAVOY	MYANAUNG
CHAUK	BHAMO	PANTANAW	MEIKTILA
THAYETMYO	YEMETHIN	TAUNGYI	MINGALADON
YENANGYAUNG	MAGWE	MYINGYAN	DANUBYU

மணியார்டர்கள்:—மணியார்டர்கள் மூலம் இந்தியாவிற்கு பணம் அனுப்புவதில் முந்திய ஏற்பாடுகளிலிருந்து ஒரு முக்ய மாறுதல் செய்திருக்கிறார்கள். முன்பு 12. மணியார்டர் பாரங்களை சேர்ந்தாற்போல் பதிவு செய்து கொடுத்ததற்குப் பதிலாக, இப்போது 6. மணியார்டர் பாரங்கள்தான் சேர்ந்தாற்போல் பதிவுசெய்யமுடியும். மாதம் ஒன்றுக்கு ரூபாய் 40. விதம் கட்டணம் ரூபாய் ஒன்றுடன் ஏர்மெயில் சார்ஜ் பியா 40. சேர்த்து அனுப்பவேண்டும். புதிதாக ரிஜிஸ்டர் செய்யும் மணியார்டர்களிலும், புதுப்பிக்கும் மணியார்டர்களிலும், அகில பர்மா இந்தியன் காங்கிரஸிலிருந்தோ, வார்டு அல்லது கிராம ஹெட்மேன்களிடமிருந்தோ அத்தாட்சி பெறவேண்டும் ரிஜிஸ்டர் செய்யும் அல்லது புதுப்பிக்கும் மனுக்களுக்கு ஒரு ரூபாய் கட்டணம் உண்டு.

தபாலாபீஸ்கள்:—பர்மாவிலுள்ள தபாலாபீஸ்கள் எல்லாம் வேலை செய்கின்றன. மொத்தம் 390. தபாலாபீஸ்கள் நடைமுறையில் இருக்கின்றன. இவ்வருஷம் பல இடங்களில் புதிய தபாலாபீஸ்கள் திறக்க ஏற்பாடுகள் செய்துவருகிறார்கள்.

போக்குவரத்து சாதனங்கள்:—உள்நாட்டு விமானப் போக்குவரத்து முன்வருஷத்தைக்காட்டிலும் விரிவான முறையில் நடந்து வருகிறது. தற்பொழுது கீழ்கண்ட இடங்களுக்கு போய்வர ஏற்பாடுகள் இருக்கின்றன.

மாந்தலே	கலிமியோ	சவுட்டு	தவாய்
கத்தா	லெய்க்கோ	காங்கோ	மெர்க்குவி
பாமோ	ஹோஹோ	வர்ண்யுவா	தட்டோன்
அனிசக்கான்	கென்டுங்	மெக்டிலா	மியாங்மியா
மணியுவா	மோமீக்	மக்குவே	பாசியன்
மெச்சினு	சுவைப்போ	பவ்	சாண்டுவே
லாஷியோ	பக்கோக்கூ	மோல்மேன்	சவுப்பியூ
			அக்யாப்

ரயில்போக்கு வரத்தில் யுத்தத்திற்கு முன்னிருந்த பாதைகள் எல்லாம் திறக்கப்பெற்றுவிட்டன. குழப்பக்காரர்களின் நடவடிக்கைகளால் சிற்சில சமயங்களில் போக்குவரத்து தடைப்பட்டாலும் உடனுக்குடன் சீர் செய்யப்பெற்றுவருகிறது. பகல் நேரங்களில்மாத்திரம் வண்டிகள் போய்வருகின்றன.

உள்நாட்டுக் கப்பல்போக்குவரத்தும் யுத்தத்திற்குமுன் கப்பல்கள் போய்வந்த பகுதிகளுக்கெல்லாம் இப்போதும் போய்வந்துகொண்டிருக்கின்றன.

கப்பல் பிரயாணக் கட்டண உயர்வு:—இந்தியாவுக்கு போக்குவரத்து செய்யும் கப்பல் கம்பேனிக்காரர்களான (1) சிந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பேனி, (2) பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பேனி, இவர்கள் இந்தியா–பர்மா பிரயாண டெக் டிக்கெட்டுகளுக்கு, சமீபத்தில் 100க்கு 20. சதவிகிதம் கட்டணங்களை உயர்த்தி இருக்கிறார்கள். ஏற்கனவே சென்னைக்கு 50. ரூபாய் கட்டணம் வாங்கிவந்ததற்

குப் பதில், இப்போது 60 ரூபாயும் ஏற்கனவே கல்கத்தாவுக்கு 40 ரூபாய் கட்டணம் வாங்கிவந்ததிற்குப் பதில், இப்போது 48 ரூபாயு மாக வாங்கிவருகிறார்கள். மற்ற வகுப்பு டிக்கட்டுகளுக்கு இந்தக் கட்டண உயர்வு இல்லை.

இதர விஷயங்கள்.

பாங்குகள் மூலம் பணம் அனுப்புதல்:—பாங்குகள் மூலம் பணம் அனுப்பும் பிரச்னை முந்திய வருஷம்போலவே இவ்வருஷமும் கடுமையாக இருந்துவருகிறது. இவிடம் அன்னியநாட்டு எக்சேஞ்ச் கண்ட்ரோலர்கள், பணம் அனுப்பும் மனு எதுவையும் அனுப்பிய உடனே ஒப்புக்கொள்வதில்லை. பலமுறை திருப்பி அனுப்பி, பலதிறப்பட்ட கேள்விகள் கேட்டு, கடைசியில், மனுவில் கண்ட தொகையிலிருந்து மிகவும் குறைவான தொகைகளுக்கு ஆர்டர் செய்துவருகிறார்கள். மாதாந்திரம் பணம் அனுப்பத் தாக்கல் செய்யும் மனுக்களையும், இலகுவில் ஆர்டர் செய்யாமல், இணங்கியவரை காலந்தாழ்த்தக் கடைசியாக வரும் படியில் சொற்ப பகுதிக்குமட்டும் ஆர்டர் செய்கிறார்கள். மாதாந்திரம் பணம் அனுப்பக்கோரும் மனுக்களுடன், வருஷத்துக்கு ஒரு முறை இந்தியாவிலுள்ள ஜில்லா மாஜிஸ்ட்டிரேட் சர்ட்டிபிகேட் தாக்கல் செய்யவேண்டும். ஊருக்குப் போய்வருபவர்கள் வழிச்செலவுக்காகத் தாக்கல் செய்யும் மனுக்களுக்கு முன்பு ரூபா 200-க்கு ஆர்டர் செய்துவந்ததற்குப்பதில் இப்போது ரூபா 300-க்கு ஆர்டர் செய்துவருகிறார்கள். இன்கம்டாக்ஸ் வரி ரசீது முதலியவைகள் தாக்கல் செய்யக்கூடியவர்களுக்கு கொஞ்சம் கூடுதலாகவும் ஆர்டர் கிடைக்கிறது.

பர்மாவிலிருந்து இந்தியா செல்லும் பிரயாணிகள் கொண்டுபோகக்கூடிய தொகை:—முன் வருஷத்தில் இருந்தபடி இந்தியா செல்லும் பிரயாணிகள் ரூ 100-க்கு இந்தியா நோட்டு மாற்றிக் கொண்டு போகலாம். இந்தியன் ஓவர்ஸீஸ் பேங்க், சென்ட்ரல் பேங்க், யூனைடெட் கமர்ஷியல் பேங்க், கிரிண்ட்லேஸ் பேங்க், இவைகளில் இந்தியா செல்லும் பிரயாணிகளுக்கு பாஸ்போர்ட், டிக்கட் இவைகளைப் பார்த்துக்கொண்டு 100-க்கு வட்டம் ரூ. 3 வாங்கிக்கொண்டு இந்தியா நோட்டு கொடுக்கிறார்கள்.

இமிகிரேஷன் பாஸ்போர்ட்டு விபரங்கள்:—இமிகிரேஷன் பாஸ்போர்ட்டு இவைகளில் இவ்வருஷம் எவ்வித மாறுதலும் இல்லை. இந்திய பாஸ்போர்ட்டுடன் பர்மிய விசா உள்ளவர்கள்தான் பிரயாணம் செய்யமுடியும். 1-1-32 முதல் 1-1-42 வரை, அல்லது 4-1-38 முதல் 4-1-48 வரை, இந்த இரண்டு காலங்களில் ஏதாவது ஒரு காலத்தில் 8 வருஷம் பர்மாவில் இருந்து, பர்மாவில் நிரந்தர வாசத்திற்குத்தகுதியுடையவர்கள், ஏதாவது ஒரு காரணத்தால் இந்தியாவில் சுணங்கியிருந்து இப்போது வர விரும்பினால், அவர்களுக்காக இங்குள்ள அவர் நண்பர்கள், விபரங்களைக்கண்டு மனுச்செய்து அபிடவிட்டுகளும் தாக்கல் செய்து, முதலில் Q. R. S. என்ற மூன்று மாதப் பர்மிட்டுகள் வாங்கியனுப்பி பிறகு அவர்கள் பர்மாவுக்கு வந்தவுடன் பாஸ்போர்ட்டில் நிரந்தர வாசத்திற்குப் பதிவு செய்துகொள்ள ஏற்பாடு செய்யவேண்டும். நிரந்தர வாசத்

திற்குத் தகுதியுள்ளவர்கள், தங்கள் சம்சாரம், 18. வயதிற்கு மேற்படாத குழந்தைகள் ஆகியோரை D. P. R. என்ற மூன்றுமாத பர்மிட்டுகள் வாங்கியனுப்பி வரவழைத்துக்கொள்ளலாம். பிறகு அவர்கள் வந்தவுடன் அதை நீடித்துக்கொள்ளலாம்.

நிரந்தர வாசத்திற்கு உரிமையில்லாதவர்கள் பர்மாவில் சில வருடங்கள் தங்கி, தொழில் ஸ்தாபனங்களையோ அல்லது வேறு அலுவல்களையோ கவனிக்கவேண்டுமானல், அவர்களுக்காக பர்மாவில் வசிப்பவர்கள் முழுவிபரங்களைக்கண்டு அவிடவிட்டுடன் மனுக்கொடுத்து அயல்நாட்டி லாகாவிலிருந்து அனுமதிபெற்றபிறகு அந்த நபர்களைத் தருவிக்கலாம்.

சாதாரணச் சுற்றுப்பிரயாண பாஸ்போர்ட்டுகளை இந்தியாவிலுள்ள பர்மிய பாஸ்போர்ட்டு ஆபீசர்களே வழங்குகிறார்கள். அதைக்கொண்டு பர்மாவுக்கு வருபவர்கள் மூன்று மாதத்திற்குள் திரும்பிப்போக இயலாவிட்டால், தகுந்த காரணம் காட்டி மேலும் சிறிது காலம் நீடித்துக்கொள்ளலாம்.

அன்னியர்களின் பதிவு:—இந்தியர்களில் பலர் இன்னும் அன்னியர் ரிஜிஸ்ட்ரேஷன் சட்டப்படி ரிஜிஸ்டர் செய்துகொண்டதாகத் தெரியவில்லை என்றும், அவ்விதம் ரிஜிஸ்டர் செய்து கொள்ளாதவர்கள், ஏற்கனவே பதிவு செய்துகொள்ளாததற்கு இப்போது தகுந்த காரணங்கள் காட்டிப்பதிந்துகொள்ளலாமெனவும் தெரியவருகிறது. அப்படிச் செய்துகொள்ளாவிட்டால் அவர்கள் பேரில் சர்க்கார் நடவடிக்கை எடுத்து ரூ. 25. வரை அபராதம் விதிக்கக்கூடும்.

விலாசமாறுதல்களை அவ்வப்போது அன்னிய ரிஜிஸ்ட்ரேஷன் இலாகாவுக்குத் தெரிவித்து சர்ட்பிகேட்டில் எழுதிவாங்கிக் கொள்ளவேண்டும். தெரிவிக்கத் தவறினல் நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள்.

இன்கம்டாக்ஸ் கிளியரன்ஸ் சர்ட்பிகேட்டுகள்:—இந்தியாவிலிருந்து அன்னிய நாடுகளுக்குப் பிரயாணமாகும் நபர்கள், இந்திய இன்கம்டாக்ஸ் ஆபீஸர்களின் பாரிடமிருந்தாவது சரட்பிகேட் பெறவேண்டும். சரட்பிகேட் இல்லாதவர்கள் பிரயாணம் செய்ய இயலாது. இன்கம் டாக்ஸ் வரியைச் செலுத்தாமல் பலர் அன்னிய நாடுகளுக்குப் போய்விடக் கூடும் என்பதைத் தடுப்பதற்காகவே இந்த சர்டிபிகேட்முறை அவசியமெனத் தெரிகிறது. கீழ்க்கண்டவர்களுக்கு டி. சர்ட்பிகேட் அவசியமில்லை.

(1) 18. வயதிற்கு உட்பட்டவர்கள்

(2) பிரயாண மத்தியில் தங்குபவர்கள், ரிட்டன் டிக்கட்டுடன் 90. நாட்களுக்கு மேற்போகாமல் தங்குபவர்கள்.

(3) மத்திய சர்க்கார், மாகாண சர்க்கார்கள், ஸ்தல அதிகாரிகள், அவர்கள் சம்சாரங்கள்.

(4) (அ) இந்தியாவுக்குப் அனுப்பப்பெறும் அன்னிய நாட்டுத் தூதுவர்கள், அவர்கள் சம்சாரங்கள்.

(ஆ) அன்னிய நாட்டு கான்சலர் ஆபீசர்கள், அவர்கள் சம்சாரங்கள்.

(இ) அன்னிய நாட்டு வியாபாரக் கமிஷனர்கள், அவர்கள் சம்சாரங்கள்.

(ஈ) மேற் குறிப்பிட்டவர்களின் உத்யோகஸ்தர்கள், இதர சிப்பந்திகள், அவர்கள் சம்சாரங்கள்.
(அவர்கள் எந்த நாட்டிலிருந்து அனுப்பப்பெறுகிறார்களோ அந்த நாட்டின் பிரஜைகளாக இருக்கவேண்டும். அவர்களுக்கு இந்தியாவில் வேறுவித சம்பாத்யம் இருக்கக்கூடாது.)

(உ) யுனைட்டெட் நேஷன்ஸ் உத்யோகஸ்தர்கள், அவர்கள் சம்சாரங்கள்.

5. (அ) இந்தியாவிலிருந்து பர்மா, ஸிலோன், மலேயா இவிடங்களுக்கு எமிக்ரேஷன் ஆபீஸர்கள் அனுமதியின் பேரில் கூலிவேலை செய்ய அனுப்பப்படும் நபர்கள்.

(ஆ) எமிக்ரேஷன் ஆபீஸரின் அனுமதியின் பேரில் தொழில் பழகவோ அல்லது செய்யவோ அன்னிய நாடுகளுக்கு அனுப்பப்படும் நபர்கள்.

சாதாரணமாக இந்நபர்களுக்கு இன்கம் டாக்ஸ் க்ளியரன்ஸ் சர்டிபிகேட்டுகள் தேவையில்லையாயினும், ஒரு இன்கம்டாக்ஸ் ஆபீஸர் தன் சொந்த அபிப்பிராயத்தின் பேரில் அவர்களை ஷை சர்டிபிகேட்டுகளை வாங்கும்படி தெரிவிக்கலாம்,

அகில பர்மா விவசாயிகள் மகாநாடு, மாந்தலே:—

1953 ம் வருஷம் மே மாதம் கடைசிவாரத்தில் மாந்தலேயில் நடந்த அகில பர்மா விவசாயிகள் மகாநாட்டில் நிலம் தேசியமாக்கும் இலாகா மந்திரி தக்கின் டின் அவர்களை மீண்டும் தலைவராகத் தேர்ந்தெடுத்துள்ளார்கள். மற்ற உத்யோகஸ்தர்கள் வருமாறு:—

போமூ அவுங், (பார்லிமெண்ட் கீழ் சபை உப-தலைவர்) யோ கீங் மவுங்கலே, (உள்நாட்டு மந்திரி)-உப தலைவர்கள்; தக்கின் சோட்டுங்—விவசாயம் அண்டு காடுகள் இலாகா மந்திரி-பொதுக்காரியதரிசி; தக்கின் டிங் மவுங் (உள்நாட்டு இலாகா பார்லிமெண்டரி காரியதரிசி) தக்கின் சாங் மீன் (நிலம் தேசிய மாக்கும் இலாகா பார்லிமெண்டரி காரியதரிசி) தக்கின் சிட் மவுங் (பாதுகாப்பு இலாகா பார்லிமெண்டரி காரியதரிசி) இம்மூவரும் கூட்டுக்காரியதரிசிகள்.

அந்த மகாநாட்டில் பல தீர்மானங்கள் செய்திருக்கிறார்கள். அவைகளில் கீழ்க்கண்ட இரண்டு தீர்மானங்கள் முக்கியமானவை.

1 பசிக்கொடுமை, ஏழ்மை, அடக்கி ஆளுதல், கொலை, யுத்தங்கள், இன்னுமுள்ள கொடுமைகள் எல்லாம் முதலாளித்துவம், குடியேற்றம், நிலச்சுவான்தாரி முறை இவைகளால் ஏற்பட்டவைகளாகும். அதனால் தான் சுதந்திரத்திற்குப் போராடும்போது, கஷ்டப்பட்ட விவசாயிகள்

நிலங்களை எடுத்துக்கொள்கிறார்கள். பர்மிய விவசாயிகளும் அவ்விதம் செய்கிறவர்கள் தான். இந்தப் போராட்டத்தில் ப. சு. ப. ல. வின் முதல் வெற்றியானது 1948-ம் வருஷம் ஜனவரி மாதம் 4-உ யன்று சுதந்திரம் பெற்றது. சுதந்திரத்துக்குப்பிறகு கீழ்க்கண்ட சட்டங்கள் நிறைவேற்றப்பெற்றிருக்கின்றன.

1. விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம்.
2. குடியாண்மை ஸ்டான்டர்ட் சேவா சட்டம்.
3. கூலிக்காரர்கள் சம்பளச்சட்டம்.
4. லேவாதேவிச் சட்டம்.
5. விவசாய பாங்குகள் சட்டம்.
6. நிலம் தேசியமாக்கும் சட்டம்.

இது இரண்டாவது வெற்றியாகும்.

மொத்தம் 21,479,857 ஏக்கர்களில் 9,990,000 ஏக்கர்கள் நிலச்சுவாந்தார்கள் வசம் இருக்கிறது. ப. சு. ப. ல. சர்க்காரின் நோக்கமாவது இவைகளை 3 வருஷங்களில் தேசியமாக்கி, விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுத்து 10 வருஷங்களுக்குள் விவசாயிகள் சுதந்திரத்தை அடைவது, இதைச் செய்துமுடிப்பது 3 வது வெற்றியாவதுடன் கடைசிப்படியுமாகும். இதற்கு விவசாயிகள் எல்லோரும் பூரணமாக ஒத்துழைக்கவேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கின்றது.

2. பிரிட்டிஷ் அரசாட்சியில், லாபத்தையே முக்கிய நோக்கமாகக் கொண்ட நிலச்சுவாந்தாரி முறையும், முதலாளித்துவமும், அதிகாரத்துடன் இருந்தபடியால், சுதேச மக்கள் கஷ்டத்துடனும் ஏழ்மையுடனும் இருந்தார்கள். சுதேச மக்களுக்குச் சகாயமான பொருள் உற்பத்தியும், தொழில்களும் செய்யமுடியவில்லை. சுதந்திரம் கிடைத்தபிறகு குழப்பங்களினால் முதலாளித்துவம், நிலச்சுவாந்தாரி முறை, குடியேற்றம் முதலியவற்றை அகற்றமுடியவில்லை. தேசியப் பொருளாதாரமும் சீர்கேடடைந்தது. இப்போது குழப்பங்கள் குறைந்து விட்டபடியால், 1952-ம் வருஷம் ஆகஸ்டுமாதத்தில் நடந்த பர்மா யூனியன் மகாநாட்டில் சாப்பாட்டுக் குறையில்லாமல் செய்யவும், விவசாயம், கிராம அபிவிருத்தி இவைகளில் முன்னேற்றம் ஏற்படவும் ஐந்து வருஷத் திட்டம் ஒன்றை வகுத்து, அதில் கீழ்க்கண்ட பயிர்களை உற்பத்தி செய்வதென முடிவு செய்திருக்கிறார்கள்.

(அ) நெல். (ஆ) கடலை. (இ) பருத்தி. (ஈ) பருப்புவகைகள். (உ) வெங்காயம். (ஊ) கரும்பு. (எ) மிளகாய். (ஏ) கோதுமை, பார்லி. (ஐ) சணல். (ஒ) சோளம். (ஓ) புகையிலை. (ஔ) தேயிலை. (க) காப்பி. (ங) தேங்காய். (ச) காய்கறிகள்.

இம்மகாநாடு, அந்த ஐந்து வருஷத்திட்டம், விவசாயிகளின் சாப்பாட்டுக்குறையில்லாமல் இருப்பதற்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் நன்மை பயக்கக்கூடியதாய் இருப்பதால், இத்திட்டம் பரிபூரணமாக நிறைவேறுவதற்கு விவசாயிகள் முழுமனதுடன் ஒத்துழைக்க வேண்டுமெனத் தீர்மானிக்கின்றது.

சீனுவுக்கும் ருஷ்யாவுக்கும் போய்வந்த நிலம் தேசியமாக்கும் பார்வையாளர் தூதுகோஷ்டி:—இந்த தூது கோஷ்டியானது 1952ம் வருஷம் ஆகஸ்டுமீ 30வ யன்று இரங்கூனிலிருந்து பிரயாணமாகி முதலில் சீனுவிலும், பிறகு ருஷ்யாவிலும் சுற்றுப்பிரயாணம் செய்து பார்வையிட்டபின் நவம்பர் மாதம் 13வ இரங்கூனுக்குத் திரும்பி வந்தது. இந்தத் தூதுகோஷ்டியின் நபர்கள் வருமாறு: 1 தக்கின்டின், நிலம் தேசியமாக்கும் இலாகா மந்திரி. 2. ஊபாட்டே, ஷை இலாக்கா காரியத ரிசி. 3. தக்கின்சான் மீங், ஷை இலாக்கா பார்லிமெண்டரி காரியதரிசி. 4. ஊட்டுன் டின், ஷை இலாக்கா எக்ஸ்கூடிவ் ஆபீஸர். அவர்கள் நீண்ட ரிப்போர்ட்டு ஒன்றை சமர்ப்பித்துள்ளார்கள. சீனு, ருஷ்யா தேசங்களில் நிலங்களை எப்படிப் பிரித்துக் கொடுத்திருக்கிறார்கள. எப்படி கூட்டுறவுஸ்தாபனங்கள் மூலம் விவசாயத்தை எவ்விதம் திறம்பட நடத்து கிறார்கள், இயந்திரங்கள் மூலம் விவசாயத்தை எவ்விதம் விரிவாகவும் சிக்கனமாகவும் செய்கிறார்கள், சர்க்கார் பண்ணைகளை எப்படி நடத்துகிறார்கள் என்பதெல்லாம் விவரமாகத்தெரிவித்துள்ளார்கள். பர்மாவில் நிலங்களைத் தேசியமாக்கியபிறகு மேற்கண்ட விவரங்கள் மிகவும் உபயோகப்படக் கூடியவையாகும்.

துவேஷப் பிரசாரம்:—1952ம் வருஷம் டிசம்பர் மாதம் வாகில் அமெரிக்க சுப்ரீம் கோர்ட்டு உதவி நீதிபதி வில்லியம் ஓ. டுக்ளஸ் அவர்களால் "லுக்" என்ற சஞ்சிகையில் எழுதப்பெற்று, இவிடம் "நேஷன்" பத்திரிகையில் பெயர்த்து வெளியிடப்பெற்ற, பர்மாவைப் பற்றிய ஒரு வியாஸத்தில், "நிலம்—பர்மாவிலுள்ள எல்லா நிலங்களிலும் 60 சத விகிதம் நிலச்சுவாந்தார்களிடம் இருக்கிறது. மதராசிலிருந்து வந்த செட்டியார்கள் என்ற வகுப்பினர் வருஷம் ஒன்றுக்கு 100 க்கு 180 வட்டி வீதம் கடன் கொடுத்து, ஈட்டுப் பாக்கிகளுக்காக ஏராளமான நிலங்களை எடுத்துக் கொண்டுள்ளனர்" என்று கண்டிருக்கிறது. இதை மறுத்து நாம் அவருக்கே ஒரு நீண்ட கடிதம் எழுதியுள்ளோம். நிலங்களின் பேரில் கடன் கொடுத்த காலத்தில் நம்மவர்களுடைய வட்டி விகிதம் வருஷம் ஒன்றுக்கு 100 க்கு 12 முதல் 18 க்கு மேல் இல்லை என்பதற்கு பாங்கிங் என்குயரி கமிட்டி ரிப்போர்ட்டிலிருந்து ஆதாரங்கள் காட்டியும், நிலங்கள் எப்போதும் 60 சதவிகிதம் நிலச்சுவாந்தார்களிடம் இருந்ததில்லை என்பதற்கு சர்க்காரின் பருவங்கள், வினவுகள் ரிப்போர்ட்டிலிருந்து ஆதாரங்கள் காட்டியும் மறுப்பு தெரிவித்திருக்கிறோம்.

நெருப்பு விபத்துக்கள்:—முந்திய வருஷத்தைப் போல் இவ்வருஷமும் நெருப்பினால் ஏராளமான சேதம் ஏற்பட்டுவிட்டது. சமீபத்தில் இரங்கூன் நகரில் ப. ச. ப. ல. குவெத்திட் என்ற இடத்திலும் மின்மியாயின் குவெத்திட் என்ற இடத்திலும் நெருப்புப் பிடித்து சுமார் 5000 மக்கள், வீடு, வாசல் சொத்துக்களை இழந்தனர். இரங்கூன் நகர மேயர் நெருப்பு நிவாரண நிதி ஒன்று ஆரம்பித்து வசூல் செய்து அவதியுற்ற மக்களுக்கு, உணவுப் பொருள், பாத்திர பண்டங்கள், உடை முதலியவற்றை வழங்கினார். எல்லா மக்களும் இந்நிதிக்குத் தாராளமாக உதவிசெய்தார்கள். மீண்டும் 38வது வீதிக்கு இருபுறமும் நெருப்பால் சேதம் ஏற்பட்டது. சுமார் 2000 மக்கள் வீடு வாசல்களை இழந்தனர். அவர்களுக்கு பண்டுலாஸ்கொயரில் தற்காலிக வாசம்செய்வதற்கு குடிசைகள் கட்டிக்கொடுத்த

கார்ப்பரேஷனில் வசதி செய்து கொடுத்தார்கள். இந்தியர்களும் ஏனையோரும் அவர்களுக்குப் பலதினங்கள்வரை உணவு வழங்கினார்கள். அதில் அகில பர்மா தமிழர் சங்கம் பெரும் பங்கு எடுத்துக்கொண்டு வேலைசெய்தது. அதில் நம்மவர்கள் ஊக்கத்துடன் கலந்துகொண்டு உதவிசெய்தது போற்றத்தக்கதாகும். பர்மாவில் நாட்டுப்புறங்களிலும் நெருப்பினால் அதிக சேதம் ஏற்பட்டது.

மோல்மேன்சூன் அளகப்பன் அம்பலம் பேரில் கம்பிளேண்டு:—மோல்மேன்சூன் அளகப்பன் அம்பலம் என்பவர் பேரில் ஷெயூர் மாதவன் என்பவர், அளகப்பன் அம்பலத்தின் இந்தியாவிலிருக்கும் சொந்தக்காரரின் சொத்துக்களை அவர் அபகரித்துக் கொண்டதாக இவிடம் இந்தியன் எம்பஸியில் ஒரு கம்பிளேண்டு கொடுத்திருந்தார். இந்தியன் எம்பஸியார் ஷெ. அளகப்பன் அம்பலத்தைப்பற்றி விசாரித்துத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். அதுபோல் நாம் 26–2–53 உ யில் ஷெ அளகப்பன் அம்பலத்துக்குக் கடிதம் எழுதி, இவிடத்துக்கு வரும்படி செய்து விசாரித்ததில், அவர் பேரில் பிசகு இல்லை யெனத் தெரிந்தது. மேலும் அவர் நடவடிக்கைகளைப் பற்றி நம் சங்க அங்கத்தினர்களில் (1) சி. கரு சி. கரு ஏஜெண்டு கண்ணப்ப செட்டியார், (2) சுப. கயி. கயிலாசம் செட்டியார் இருவரும் திருப்தியான சர்டிட்பிகேட்டுக் கொடுத்த ஹாப்பிருந்தனர். அதுபோல் நாம் இந்தியன் எம்பஸிக்குத் தெரிவித்து ஷெ அளகப்பன் அம்பலத்தின் பேரில் எவ்விதக் குற்றமும் இல்லாமல் தீர்த்துவிட்டோம்.

மாந்தலே நகரத்தார்கள் கோவில் இடத்துக் கிராண்டு புதுப்பிக்கும் முயற்சி:—மாந்தலே நகரத்தார்கள் கோவில் இடத்துக் கிராண்டு புதுப்பிப்பதில் தடங்கல் ஏற்பட்டு நகரத்தார்கள் சார்பாக திரு. ராமஸ்வாமி என்பவர் இவிடம் இந்தியன் எம்பஸிக்கு எழுதியது பற்றி மேற்கொண்டு விவரங்கள் தெரிந்துகொள்வதற்காக அது சம்பந்தமான நடவடிக்கைகள், விவரங்கள் பூராவையும் வரவழைத்துத் தரும்படி இந்தியன் எம்பஸியார் நம்மைக் கேட்டுக்கொண்டார்கள். அதுபோல் 12–5–53 உ யில் மாந்தலே நகரத்தார்கள் அவர்களுக்கு விவரமான கடிதம் எழுதினோம். பிறகு இவிடம், சா. ராம. மு. சித. மு. கடை மூலம் கிடைத்த விவரங்களையும் இந்தியன் எம்பஸிக்கு அனுப்பிவைத்தோம். அவர்கள் ஆவன செய்வதாகத் தெரிவித்தனர்.

உபசாரங்கள்.

வழியனுப்பு:—பர்மாவில் இந்திய அரசாங்கத்தின் தூதுவராக சுமார் 6 வருஷங்கள் இருந்து இந்தியர்களுடனும் பர்மியர்களுடனும் மிக அன்யோன்யமாகவும் இருந்துவந்த கனம் டாக்டர் ரவூப் அவர்கள் ஜப்பானுக்கு இந்தியத்தூதுவராக மாற்றப்பெற்றார்கள். அவர்கள் குடும்பத்துடன் 2–9–52உ "சக்கோலர" என்ற கப்பலில் பிரயாணித்தார்கள். நம் காரிய சபை அங்கத்தினர்கள் அவர்களுக்கு மலர் மாலை அணிவித்து வழியனுப்பி வைத்தார்கள்.

நம் சங்கத்தின் இவ்வாண்டு முற்பகுதியில், கௌரவ காரியதரிசியாக இருந்து சிறந்த தொண்டாற்றி, தாய்நாடு செல்வதின் நிமித்தம் இராஜிநாமாச்செய்து ஊருக்குச் சென்றுள்ள திரு நா. லெ இராமநாதன் செட்டியார் அவர்கள் 25—4—53உ காலை விமானத்தில் பிரயாணமானார்கள். நம் காரியசபை அங்கத்தினர்களும் மற்றவர்களும் மலர்மாலை அணிவித்து வழியனுப்பிவைத்தார்கள்.

நம் சங்கத்தின் இவ்வாண்டு முற்பகுதியில் தலைவராக இருந்து சங்கத்தை ஐக்கியத்துடன் நடத்தித்தந்த திரு, சுப. சு, அ. ராம. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் தாய்நாடு செல்வதினிமித்தம் இராஜிநாமாச் செய்து 17—5—53உ "ஜலதர்கா" கப்பலில் பிரயாணமானார்கள். அதுசமயம் நம் சங்க காரியசபை அங்கத்தினர்களும் மற்ற அன்பர்களும் அவர்களுக்கு மலர்மாலை அணிவித்து வழியனுப்பிவைத்தார்கள்.

வரவேற்பு—பர்மாவில் இந்திய அரசாங்கத்தின் தூதுவராக இருந்து ஜப்பானுக்கு மாற்றப்பெற்றுச் சென்ற கனம் டாக்டர் ரவூப் அவர்களுக்குப்பதிலாக ஜப்பானில் இந்தியத் தூதுவராக இருந்த கனம் கிருஷ்ண கிருஷ்ண செட்டூர் அவர்கள் பர்மாவுக்கு மாற்றப்பெற்று 18-9-52உ காலை விமானத்தில் மிங்கலாடோன் வந்து இறங்கினார்கள். இந்தியர்கள் சார்பாக அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது. நம் சங்க அங்கத்தினர் பலரும் நமது வரவேற்பில் கலந்துகொண்டார்கள்.

பர்மாவில் இலங்கை அரசாங்கத்தின் தூதுவராக 25-5-53உ "வார்விக்ஷயர்" என்ற கப்பலில் இவிடம் வந்துள்ள கனம் வி. குமாரஸாமி அவர்களை நம் அங்கத்தினர்களில் சிலர் வந்திறங்கியவுடன் பங்களாவில் போய் வரவேற்று உபசரித்தார்கள்,

ஆசிய சோஷலிஸ்டு மகாநாட்டின் தென்னிந்தியப் பிரதிநிதிகளுக்கு உபசரிப்பு:—ஆசிய சோஷலிஸ்ட் மகாநாடு 1953-ம் வருஷம் ஜனவரி மாதம் முதல் இரண்டாவது வாரங்களில் இரங்கூனில் நடந்தது. அதற்குத் தென்னிந்தியாவிலிருந்தும் திரு. மு அ. வீரப்பன் முதலிய சில பிரமுகர்கள் வந்திருந்தார்கள். அவர்கட்குத் தமிழர்கள் சார்பில் பல வரவேற்புகளும், உபசரிப்பும் அளிக்கப்பட்டன, நம் சங்கத்திலிருந்தும் 12-1-53உ ஒரு போஜன விருந்து அளிக்கப்பெற்றது.

முக்கிய தீர்மானங்கள்.

1-9-52உ நிர்வாக சபைக்கூட்டம்.

கம்பை தனவைசியர் கல்விக்கழகத்தின் ஆபீசை நம் சங்கக் கட்டிடத்தில் நடத்திக்கொள்வதற்கு அனுமதிகோரி எழுதிய 1-9-52உ கடிதம் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பெற்று, தோதுபோல் சயோத்தியாக ஆபீஸ் நடத்திக்கொள்ளும்படி பதில் எழுதுவதென முடிவுசெய்யப்பெற்றது.

15 5—53உ நிர்வாக சபைக்கூட்டம்

தலைவர், உப-தலைவர், கௌரவ காரியதரிசி, கௌரவ உப-காரியதரிசி, இந்தப்பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்றவர்கள் அந்நிய நாடுகள் சென்றால் தங்கள் பதவிகளை இராஜிநாமாச்செய்து செல்லவேண்டும். அவர்கள் அந்நிய நாடு சென்றதும், அவர்கள் பதவிகள் காலியானதாகக் கருதப்பெற்று, அந்த ஸ்தானங்களுக்கு வேறு நபர்கள் தேர்ந்தெடுக்கப்பெறுவார்கள்.

கௌரவ காரியதரிசி, கௌரவ உப-காரியதரிசி இவர்கள் பதவி காலம் முடிந்துவிலகும்போதும் அல்லது அந்நிய நாடுகள் செல்வதால் பதவியிலிருந்து விலகும்போதும் தங்கள் பொறுப்புகளை அதற்குரியவர்களிடம் ஒப்பிவிக்கவேண்டும்.

நன்கொடைகள்.

இந்திய இராணுவ கொடிதின வசூல்:—இந்தியராணுவ தரைப்படை, கடற்படை, ஆகாயப் படையைச் சேர்ந்த வீரர்களின் சேவைக்கு நன்றிசெலுத்தும் முறையில், ஒரு நிதி திரட்டி, காலஞ்சென்ற வீரர்களின் குடும்பத்தினருக்கும், ஆயுளுடன் இருப்போரின் நிவாரணத்திற்கும் வழங்கும் நோக்குடன் 1952ம்வருடம் டிசம்பர் மீ 7உ யைக் கொடிதினம் எனக்கொண்டாடி, கொடிகள் விற்றுப்பணம் திரட்டித்தருமாறு இந்திய சர்க்கார் கோரியதை முன்னிட்டு, இவிடம் இந்தியன் எம்பசி இராணுவ ஆபீசர் கர்னல் தாக்கூர் அவர்களின் தூண்டுதலின்பேரில் இரங்கூன் நம் அங்கத்தினர்கள் அறைகளில் ரூபா 198 வசூல் செய்து சங்க நிதியிலிருந்து ரூ. 3 சேர்த்து ரூ. 201 ஆக 12-12-52-உ யன்று இந்தியன் எம்பசி இராணுவ ஆபீசர் கர்னல் தாக்கூர் அவர்களுக்கு அனுப்பி வைத்தோம்.

சென்னை மாகாணப் புயல் நிவாரண நிதி:—சென்னை மாகாணத்தில் தஞ்சாவூர் ஜில்லாவில் புயல்காற்று அடித்து ஏராளமான மக்களுக்கும் சொத்துக்களுக்கும் சேதமேற்பட்டது. உண்ண உணவும், உடுத்த உடையும், இருக்க இடமும், இன்றித் தவித்த மக்களுக்கு சென்னை சர்க்கார் வேண்டுகோளின் பேரில் இந்தியாவிலும், கடல் கடந்த தேசங்களிலும் பண வசூல் செய்யப் பெற்று சென்னைக்கு அனுப்பிவைக்கப் பெற்றன. இரங்கூனிலும், அகில பர்மா தமிழர் சங்கத்தின் சார்பாக ஒரு கூட்டுக்கமிட்டி திரு. முருகப்பா அன் சன்ஸ் வீர. ராமன் செட்டியார் அவர்கள் தலைமையில் அமைக்கப்பெற்றது. அவர்கள் தகுந்த முயற்சியுடன் ரூபாய் 32000 வரை வசூல் செய்து இவ்விடம் இந்தியன் எம்பசி மூலம் சென்னைக்கு அனுப்பிவைத்தார்கள், அதில் இரங்கூன் நம்மவர்கள் அறைகளிலிருந்தும், சுமார் 5000-வரை வசூல் செய்து கொடுக்கப்பட்டது.

லேக்கூ கடைக்காரர்கள் சார்பில் ரூ. 157-வசூல் செய்து நம் சங்கத்திற்கு அனுப்பி யிருந்தார்கள். அதை 24-12-52-உ யன்று இவ்விடம் இந்தியன் எம்பசி முதலாவது காரியதரிசிக்கு அனுப்பிவைத்தோம்.

ப. ச. ப. லெ. குவெத்திட் நெருப்பு நிவாரண நிதி:— இரங்கூன் ரயில்வே ஸ்டேஷனுக்குப் பின்புற முள்ள ப. ச. ப. ல. குவேத்திட் என்ற நெருக்கமான பகுதியில் நெருப்புப் பிடித்து மக்களுக்குப் பல வித கஷ்ட நஷ்டங்களையும் ஏற்படுத்தியது. இரங்கூன் நகர மேயர், அவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு ஒரு நிதி ஏற்படுத்தி, மக்களை பணமாகவோ பண்டங்களாகவோ அனுப்பிவைக்கும்படி வேண்டுகோள் விடுத்தார். நம்மவர்கள் நேராகவும் பலர் மூலமாகவும் தாராளமான உதவிகளை அளித்தார்கள்.

இரங்கூன் 118-ம் நிம்பர் அறையிலிருந்து ரூ. 301 சேர்த்து 100 சைலிகளாக வாங்கி நம் சங்கத்திற்கு அனுப்பியிருந்தார்கள். அதை 27-1-53-ல் அன்று இரங்கூன் நகர மேயருக்கு அனுப்பிவைத்தோம்.

இரங்கூன் சர்வகலாசாலையில் நம் சமூகத்தினரின் நிதி

1927—28-ம் வருஷத்தில் இரங்கூன் நகரத்தார்கள் ஒரு லக்ஷ ரூபாயும் நாட்டுப்புறத்து நகரத்தார்கள் பல பெருந்தொகைகளும் கொடுத்து இரங்கூன் சர்வகலாசாலையில் ஒரு நிதி ஏற்படுத்தியுள்ளார்கள். அந்த நிதியில் (1) 1966,68-ம் வருஷங்களில் திரும்பப்பணம் வாங்கக்கூடியதான மூன்று பர்சண்ட் வட்டி இந்திய அரசாங்கக்கடன் பத்திரங்கள் ஒரு லக்ஷ ரூபாய்க்கும் (2) 1960/70-ம் வருஷங்களில் திரும்ப பணம் வாங்கக் கூடியதான மூன்று பர்சண்ட் வட்டி பிரிட்டிஷ் அரசாங்க சேமிப்புப் பாண்டுகள் 7250. பவுனுக்கும் வாங்கிவைக்கப்பெற்றுள்ளது. இந்த நிதியானது இது போன்ற மற்ற நிதிகளைப் போல் இரங்கூன் சர்வகலாசாலை எண்டௌமெண்ட்பண்ட் டிரஸ்டிகளால் நிர்வாகம் செய்யப்பெற்று வருகிறது. ஹைக்கோர்ட் 1949-ம் வருஷத்து 49-ம் நிம்பர் சிவில் ரெகுலரில் ஏற்படுத்தப்பெற்றுள்ள ஸ்கீம் பிரகாரம் கீழ்க்கண்டவர்கள் அந்த பண்டுக்கு டிரஸ்டிகளாக இருந்து வருகிறார்கள்.

1. பர்மா யூனியன் பிரதம நீதிபதி-தலைவர்.
2. பர்மா யூனியன் பார்லிமெண்ட் மேல் சபைத்தலைவர்.
3. பர்மா யூனியன் பார்லிமெண்ட் கீழ் சபைத்தலைவர்.
4. ஹைக்கோர்ட் பிரதம நீதிபதி.
5. ஆடிட்டர் ஜெனரல்.
6. பர்மா யூனியன் பாங்க் டைரக்டர்களின் தலைவர்.
7. இரங்கூன் சர்வகலாசாலை உப அத்யக்ஷகர்.

இந்த டிரஸ்டுக்கு பர்மா யூனியன் அபிவிருத்தி டிரஸ்டி அவர்கள் காரியதரிசியாக இருந்து வருகிறார்கள்.

நிற்க, நம் நிதியிலிருந்து 1928-ம் வருஷத்தில் இரங்கூன் சர்வகலாசாலையில் பொருளாதார நிலை (Nattukkottai Chettyars' Chair of Economics என்று ஒருதனி இலாகா ஏற்படுத்தும்படி நம்சங்கத்திலிருந்து கேட்டுக் கொண்டுள்ளார்கள். ஆனால் பிறகு அந்த நிதியின் வருமானம்மிகவும் குறைவாக இருந்தபடியால் அந்த எண்ணம் கைவிடப்பெற்று பேங்கிங்

வியாபாரம் (Banking & Commerce) பற்றியபாடங்களைக் கற்பிக்கும் பிரசங்கியார்களை ஏற்படுத்துவதென்ற முடிவு ஏற்பட்டு அதுபோல் 1941-ம் வருஷம் ஜப்பானிய ஆக்ரமிப்புவரை நடைபெற்றுள்ளது. நம் நிதியின் வருமானம் அந்த ஏற்பாட்டுக்கும் பற்றுமலே இருந்துவந்திருக்கிறது. அவ்விதம் இருந்தும் பேங்கிங், வியாபார பிரசங்கியார்கள் சம்பந்தமான செலவு சுமார் ரூ. 21,000/-த்தில் நம் நிதியின் வருமானம் நீக்கி மற்ற நிதிகளிலிருந்து வருடாவருடம் ரூ. 13,500/-வரை டிரஸ்டிகள் கொடுத்து வந்திருக்கிறார்கள்.

இந்த ஏற்பாடுகள் 1941-ம் வருஷத்துடன் நின்று விட்டன. யுத்த காலத்தில் எவ்வித நடவடிக்கைகளும் நடைபெறவில்லை.

யுத்தகாலத்திற்குப்பிறகுசர்வகலாசாலையில் பேங்கிங், வியாபாரம் சம்பந்தமான படிப்புகள் ஏற்படுத்தப்பெற்ற பொழுது நம் நிதியின் வருமானம் குறைவாகவும், அது சம்பந்தமான செலவுகளில் ஒருபகுதியைக் கூட ஈடு கட்டமுடியாமலும் இருந்தபடியால் அந்த படிப்புகள் சம்பந்தமான பூராச்செலவுகளையும் பர்மிய சர்க்காரே ஏற்று, கொடுத்து வருகிறார்கள்.

இக்காரணங்களால் நம் நிதியின் நிலைமை பின்னீடு கிடைத்த வரும்படிகளுடன் கூடி, உயர்ந்து, இப்போது ஏற்கனவே தெரிவித்துள்ள இந்திய அரசாங்க, பிரிட்டிஷ் அரசாங்க பாண்டுகளுடன் பர்மிய அரசாங்க மூன்று பர்சண்ட் டிரஷரி பாண்டுகள் ரூ. 43,700-க்கும் இம்பீரியல் பாங்கில் தவணை டிபாசிட் ரூ. 12654-க்கும் ஷை பேங்கில் நடப்புக்கணக்குப்பற்றுக ஒரு தொகையும் இருந்துவருகின்றன.

இந்த நிதியிலிருந்து பொருளாதாரப்படிப்பு சம்பந்தமான பிரசங்கியார்களுக்குப்பதில் வேறுவித உபயோகம் செய்யவேண்டி நம் சம்மதத்தைப்பெற ஷை டிரஸ்டியார்களின் கூட்டத்தில் கலந்துகொள்ளும்படி நம் சங்கத்திற்கு அழைப்பு அனுப்பியிருந்தார்கள். அதுபோல் நம் சங்கத் தலைவர் திரு. சுப. க. அ. ராம. சொக்கலிங்கம் செட்டியார், கௌரவ காரியதரிசி திரு. நா. லெ. ராமனுதன் செட்டியார், காரியதரிசி திரு. சொ. சுப. சுப்பிரமணியன் செட்டியார், இம்மூவரும் டிரஸ்டியார்களின் 31-1-53 உ கூட்டத்தில் கலந்துகொண்டார்கள். அக்கூட்டத்தில் டிரஸ்டின் தலைவராகிய பர்மா யூனியன் பிரதம நீதிபதி கனம் ஊதெயிங்மவும் அவர்கள் நிலைமைகளை விளக்கிச்சொல்லி நம் நிதியின் வருமானங்களை பொருளாதார புத்தகங்கள், சஞ்சிகைகள் வாங்கவும், பொருளாதாரம், வியாபாரம் பற்றிய ஆராய்ச்சிகள் செய்யவும், சர்வகலாசாலையிலிருந்து பொருளாதாரம் பற்றிய ஒரு சஞ்சிகை வெளியிடவும் உபயோகப்படுத்த அனுமதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். நம் பிரதிநிதிகள் ஷை விஷயங்களை நம் சபையில் தெரிவித்து அவர்கள் அனுமதிபெற்று பதில் எழுதுவதாகச் சொல்லி வந்தனர். பிறகு அது சம்பந்தமாக இரங்கூன் சர்வகலாசாலை உப அத்யக்ஷகர் ஹைக்கோர்ட் நீதிபதி கனம் ஊபோஜி அவர்களும் ஒரு கூட்டம் கூட்டி நம் பிரதிநிதிகளை அழைத்து கலந்து பேசினார்கள்.

அவர்களின் கோரிக்கைகள் நம் சங்க 12—2—53உ நிர்வாக சபைக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பெற்று அதுபோல் நடக்க சம்மதம் தெரிவிப்பதென முடிவு செய்யப்பெற்றது.

பிறகு 19—2—53உ யன்று ஷெ டிரஸ்டின் காரியதரிசி அவர்களுக்கு கீழ்க்கண்ட விவரங்களுடன் கடிதம் எழுதினோம்,

1. நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் நிதியை இதுவரை சேமித்துள்ள வருமானத்தின் பகுதியையும் சேர்த்து கியாட் 2,50,000 ஆக கூட்டிவைப்பது.

2. அந்த நிதியிலிருந்து கிடைக்கும் வருட வருமானத்திலிருந்து பொருளாதார ஆராய்ச்சிக்கும், ஆராய்ச்சி சஞ்சிகைகளுக்கும், இன்னும் பொருளாதாரம், அதுபோன்ற படிப்புகள் சம்பந்தமான வெளியீடுகளுக்கும் உபயோகப்படுத்துகிறது.

3. கூட்டப்பெறும் நிதி கியாட் 2,50,000-க்கு மேல் டிரஸ்டியாரிடம் இருக்கும் தொகைகளை அவர்கள் உசிதம்போல் பொருளாதார ஆராய்ச்சிக்கு, தேவையை அனுசரித்து உபயோகப்படுத்துகிறது.

மேலும் ஒவ்வொரு கணக்கு வருட முடிவிலும் நம் நிதி சம்பந்தமான கணக்கு வரவு செலவு விபரங்களைத் தெரிவிக்கும்படியும், ஆராய்ச்சி சஞ்சிகைகளில் இரண்டு பிரதிகள் வீதம் நம் சங்கத்திற்கு அனுப்பிவைக்கும்படியும் கேட்டுக்கொண்டுள்ளோம்.

ஷெ கடிதத்தை காரியதரிசி அவர்கள் டிரஸ்டியாரின் 7—3—53உ கூட்டத்தில் வைத்து அவர்கள் தீர்மானத்தின் நகலை நமக்குத் தெரிவித்துள்ளார்கள். அந்த தீர்மானத்தில் நாம் கேட்டுக்கொண்ட விபரங்களுக்கு சம்மதித்ததாக கண்டுள்ளது. அவர்கள் தீர்மானத்தின் நகலை அப்படியே இங்கிலீஷ் மொழியிலேயே கீழே தந்துள்ளோம்.

Rangoon University Endowment Fund

ஃ ஃ ஃ ஃ ஃ

3. Recorded a letter dated 19th February 1953 from the Honorary Secretary, The Nattukkottai Chettiars' Association Burma conveying the following proposals for the use of the Nattukkottai Chettyar Fund:—

(a) The Committee agrees that the capital of the Fund be increased to K 2,50,000 from the accumulated income now lying with the Trustees.

(b) The Committee agrees that the recurring income of the Fund be used for the financing of the Economic Research Project, for the publication of Research

Journals and other works on Economics and other allied subjects.

(c) The Committee agrees that the sums held by the Trustees over and above the compass of K 2,50,000/- be used at their discretion to finance the Economic Research Project, according to requirements.

It was decided to accept these proposals and also the request of the Association that a statement of accounts of the Nattukkottai Chettyar Fund be sent to the Association at the end of each financial year. The further request that 2 copies of the Research Journals to be published be presented to the library of the Association would be forwarded to the University.

ஃ ஃ ஃ ஃ ஃ

Sd/- G. P. KIRKHAM,

Secretary.

நமது சங்கம்

சங்கத்து கப்பல் டிபார்ட்மெண்ட்:-சென்னை, கல்கத்தா, மோல்மேன் முதலிய துறைமுகங்களுக்கு இவ்வாண்டில் நம் அங்கத்தினர்களுக்கும், அவர்கள் சிப்பந்திகளுக்கும், டிக்கட்டுகள் வாங்கிக்கொடுத்து உதவப்பெற்றது. நம் அங்கத்தினர்கள், அவர்கள் சிப்பந்திகள், பிரயாணமாகிப்போய்வரும் கப்பல்களுக்கு நம் சங்கக் காரியஸ்தர்களில் ஒருவர் போய் உதவியளித்து வருகிறார்.

சங்கத்தின் சந்தா வசூல்:-இவ்வாண்டில், இரங்கூனில் சந்தா பெரும்பாலும் வசூலாகியிருக்கிறது. சில புதுக்கடைக்காரர்களும் சந்தாதாரராகச் சேர்ந்திருக்கிறார்கள். நாட்டுப்புறங்களில் பலகடைகளுக்குப் பிரதிநிகள் இல்லாமலிருப்பதாலும், நிலங்கள் விற்க இணங்காததால் பணப் புழக்கம் அதிகமில்லாததாலும், சந்தாப்பாக்கி திருப்திகரமாக வசூலாகவில்லை. எல்லா அங்கத்தினர்களும் ஒத்துழைத்து, சந்தாப்பாக்கிகளை அனுப்பித்தருமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

விசேஷ நிதி வசூல்:-சங்க நிதி வசூலுக்கென 1–9–52 உ நிர்வாக சபைக்கூட்டத்திலும் 16·9–52 உ அவசரக்காரியசபைக்கூட்டத்திலும் இரங்கூன், பாசீன் பகுதி, ஈந்தட்டாப்பகுதி இவைகளுக்குத்தனித்தனியே சப் கமிட்டிகள் நிறுவப்பெற்றன. அக்கமிட்டியார் இரங்கூனில் ஓரளவும், பாசீன் பகுதி, ஈந்தட்டாப்பகுதிகளில் இணங்கியவரையும் வசூல் செய்து தந்தார்கள். அவர்களுக்கு நமது நன்றி உரித்தாகுக.

கூட்டங்கள்:-இவ்வாண்டு ஒத்திவைக்கப்பெற்ற விசேஷப்பொதுக்கூட்டம் ஒன்றும், நிர்வாக சபைக்கூட்டம் மூன்றும், ஒத்திவைக்கப்பெற்ற நிர்வாகசபைக்கூட்டம் இரண்டும், காரிய சபைக்கூட்டம் நான்கும் அவசரக்காரிய சபைக்கூட்டம் ஐந்தும் ஒத்திவைக்கப்பெற்ற காரிய சபை கூட்டம் ஒன்றும் நடைபெற்றன. ஒரு விசேஷப்பொதுக்கூட்டமும், மூன்று நிர்வாக சபைக்கூட்டங்களும், ஒரு காரியசபைக்கூட்டமும் கோரமில்லாததால் நடைபெறவில்லை, சப்கமிட்டிக்கூட்டங்கள் தேவைக்குத் தக்கபடி நடைபெற்றன.

வாசகசாலை:-ஆங்கிலத்தினசரிகள் நான்கும், தமிழ்த்தினசரிகள் நான்கும், தமிழ் வாரப்பத்திரிகை ஒன்றும் வந்து கொண்டிருக்கின்றன. பர்மா கெஜட்டும், விளம்பர இலாகா, பர்மா வீக்லி புல்லட்டினும் பிடோதா என்ற வெளியீடும், பர்மிய அரசாங்கத்தின் பல இலாகாக்களின் அறிக்கைகளும் கிடைத்துவருகின்றன. இவ்விடம் இந்தியன் எம்பஸி, பிரிட்டிஷ் எம்பஸி, அமெரிக்கன் எம்பஸி, பாகிஸ்தான் எம்பஸி, இண்டோனேஷியன் எம்பஸி, இவைகளிலிருந்து அந்நாட்டுச்செய்தி அறிக்கைகளை இலவசமாக அனுப்பிவருகிறார்கள். பாரத் சேம்பரிலிருந்து அவர்கள் சர்க்குலர்கள் எல்லாம் அனுப்பிவருகிறார்கள். புது டில்லி அகில இந்திய வியாபார சங்கங்களின் சம்மேளனத்திலிருந்து மாதமிருமுறை 'நோட்ஸ் அண்டு நியூஸ்' என்ற வெளியீடும், அகில உலக வியாபார சங்கத்திலிருந்து 'வொரல்டு டிரேடு' என்ற மாத வெளியீடும், பல புத்தக வெளியீடுகளும், வந்து கொண்டிருக்கின்றன. சங்க அங்கத்தினர்கள் வாசகசாலையை நன்கு உபயோகப்படுத்திக்கொள்ளுகிறார்கள். கானாடுகாத்தான் திருவாளர், மு. ராம. இராமனாதன் செட்டியாரவர்கள், நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு என்ற புத்தகத்தை நம் சங்கத்துக்கு அன்பளிப்பாக அனுப்பியுள்ளார்கள். நம் சங்க வாசகசாலையில், பர்மா சர்க்கார் கெஜட் 1927-ம் வருஷமுதல் தொடர்ச்சியாக இருந்துவருவதால், சர்க்கார் இலாகாக்களை சேர்ந்த பலரும், பர்மிய, இந்திய அன்பர்களும் நம் சங்கத்துக்கு வந்து பார்த்து வேண்டியவைகளை நகல்செய்துகொண்டு போகிறார்கள். முக்கிய ஸ்தாபனங்களுக்கு உத்யோக பூர்வமான கடிதங்கள் பெற்றுக்கொண்டு சிறிது காலத்திற்கு மேற்படி கெஜட்டுகளை கைமாற்றாகக்கொடுத்து வாங்கியுள்ளோம்.

கணக்குகள்:-நம் சங்கக் கணக்குகளை தணிக்கை செய்ய இரங்கூன் சி. கரு. சி. கரு. சி. ந. இராமனாதஞ் செட்டியாரவர்களும் மேடையூர் கூ, அரு. க. அரு. க. லெட்சுமணஞ் செட்டியார் அவர்களும் நியமிக்கப்பெற்றனர். அவர்கள் மூன்று மாதத்திற்கு ஒருமுறை கணக்குகளைத் தணிக்கைசெய்து தந்த ரிப்போர்ட்டுகள் நிர்வாக சபைக் கூட்டங்களில் சமர்ப்பிக்கப்பெற்றன. முதல் இரண்டு காலங்களுக்குள்ள ரிப்போர்ட்டுகள் மேற்படி இருவராலும், மூன்றாவது ரிப்போர்ட்டு திருவாளர் கூ. அரு. க. அரு. க. லெட்சுமணஞ் செட்டியாரவர்கள் மலேயா சென்றுவிட்டபடியால், திரு. சி. கரு சி. கரு. சி. ந இராமனாதஞ் செட்டியார் ஒருவராலும் கையெழுத்துச் செய்யப்பெற்றது. பிறகு திருவாளர் சி. கரு. சி கரு. சி. ந. இராமனாதஞ் செட்டியாரவர்களும் தாய்நாடு சென்றுவிட்டபடியால், 31—7—53ல் நிர்வாக சபைக் கூட்டத்தில் திருவாளர் கண: மெ. நா சொக்கலிங்கம் செட்டியாரவர்களும், திருவாளர் சுப. க.-

அ. ராம. அண்ணாமலை செட்டியாரவர்களும் கணக்குப் பரிசோதகர்களாக நியமிக்கப்பெற்றனர். அவர்கள் தணிக்கை செய்து தந்த நாளது வருஷ ரிப்போர்ட்டும் இத்துடன் இணைக்கப்பெற்றிருக்கிறது. ஆடிட்டர்கள் எல்லோருக்கும் நமது வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சிப்பந்திகள்:-சங்கக் கிளார்க், சுப. தனுஷ்கோடி மூன்றுமாத லீவில் 8—6—53உ-யில் ஊருக்குச் சென்றுள்ளார். அவருடைய வேலைகளைப் பார்ப்பதற்காக, திரு. நாரா. நாச்சியப்ப செட்டியாரையும், சந்திவீரன் என்பவரையும் நியக்கப்பெற்றது. அவர்கள் இருவரும் 8-6-53உ முதல் குறிப்பிட்ட நேரங்களில் வந்து வேலைகளைப் பார்த்து வருகிறார்கள்.

சிக்கனம்:-சங்கச் செலவுகளை இணங்கியவரை சிக்கனமாகச் செய்வதென 3—9—51உ 28-வது வருஷாந்திரப் பொதுக்கூட்டத்தில் செய்த தீர்மானத்திற்கு இணங்க, 28-வது ஆண்டில் நடைமுறைச்செலவு ரூ. 16,877—8—9 ஆகியிருக்க, 29-ம் ஆண்டில் ரூ. 12,452—3—9-ம், 30-வது ஆண்டில் ரூ. 12,945-15-0ம் செலவாகி யிருக்கிற தென்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

முடிவுரை.

நம் சங்கம் இவ்வாண்டில் ஆற்றிவந்த தொண்டினை ஒருவாராக மேலே எடுத்துக் கூறியுள்ளோம். இந்தச் சிறிய அறிக்கையில், எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக் கூறுவதென்பது இயலாத காரியம். இவ் வருஷம் நடந்த வேலைகளனைத்தும் அங்கத்தினர்களுக்கு அவ்வப்பொழுது தெரிந்தவையேயாகும். இவ்வாண்டில் அங்கத்தினர்கள், நம் சங்க அலுவல்களில் தாராளமாகக் கலந்துகொண்டார்கள். நம்மவர்களின் நலன்களைக் காப்பதற்கு, நமது சங்கம் இன்றியமையாதது என்பதை அங்கத்தினர்கள் நன்கு அறிந்துகொண்டிருக்கிறார்கள். ஆகையால் அனைவரும் ஊக்கத்துடன் புது ஆண்டில் தங்கள் போராதரவையும், ஒத்துழைப்பையும் நல்குவதுடன், சங்கத்திற்கு நிதியும் நன்றாகத் தந்து உதவி, ஊக்கம் அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

மங்களம்.

சொ. மு. அ. மெ. ராம. ஷண்முகம் செட்டியார்,
தலைவர்.

பெரி. அழ மு. நடராஜன் செட்டியார்,
கௌரவ காரியதரிசி.

தயாரித்தவர்:
சொ. சுப. சுப்பிரமணியன் செட்டியார்
காரியதரிசி.

இரங்கூன்,
17—8—53.

உ சிவமயம்.

நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்கம், பர்மா.

நந்தன வருஷம் ஆவணி மாதம் 1உ முதல் விஜய வருஷம் ஆடி மாதம் 32உ வரையுள்ள வரவு செலவு கணக்கு.

வரவு.	தொகை. ரூ.	அ.	பை.	செலவு.	தொகை. ரூ.	அ.	பை.
ஆதாய வரவு	8	6	0	சில்லரைச் செலவு	2439	10	0
சந்தா வரவு	5898	0	0	சம்பளச் செலவு	7462	0	0
விசேஷ நிதி வரவு	2881	11	6	வீட்டுவாடகைச் செலவு	1200	0	0
இவ்வருஷத்தில் அதிகப் பற்று	4157	13	6	அச்சுக்கூலி, ஸ்டேஷனரிச் செலவு	626	2	0
				பத்திரிகைச் செலவு	486	8	0
				தபால் தந்திச் செலவு	332	3	0
				மின்சாரச் செலவு	160	0	0
				கோர்ட்டுப் பற்று	239	8	0
ஆக ரூபாய் ...	12945	15	0	ஆக ரூபாய்	12945	15	0

கணக்குகளையும் வவுச்சர்களையும் தணிக்கை செய்தோம். அவைகள் சரியாக வைக்கப் பெற்றிருக்கின்றன.
1953 ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 25உ.

பெரி. அழ. மு. நடராஜன் செட்டியார்
கௌரவ காரியதரிசி.

கண. மெ நா. சொக்கலிங்கம் செட்டியார்
சுப. க. அ. ராம. அண்ணாமலை செட்டியார்
கணக்குப் பரிசோதகர்கள்.

உ சிவமயம்.

நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்கம், பர்மா.

விஜய வருஷம் ஆவணி மாதம் 1உ யில் அயன் தொகை.

வரவு தொகை.	ரூ	அ.	பை.
ஒரு அணா விசேஷ நிதி வரவு பழைய கணக்கு வசம் ரூ. 54816 14—9 இவ்வருஷ வசூல் ரூ. 2881—11—6	57698	10	3
இந்திய ஆலோசனைக் கமிட்டி வரவு ...	11719	12	9
கம்பை தனவைசியர் கல்விக்கழகம் வரவு...	12500	0	0
இரக்கூன் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் தர்ம பரிபாலன சபை வரவு ...	5000	0	0
ஆக ரூபாய் ...	86918	7	0

பற்று தொகை.	ரூ.	அ.	பை
மதராஸ் நகர விடுதிப் பற்று ...	23	13	0
சென்ட்ரல் பேங்க் பற்று ...	300	0	0
இந்தியன் ஓவர்சீஸ் பேங்க் பற்று ...	1450	0	0
எலக்டிரிக் மீட்டர் அட்வான்ஸ் பற்று ...	60	0	0
வீட்டு வாடகை அட்வான்ஸ் பற்று ...	125	0	0
சாமான் கொள்முதல் பற்று ...	2066	4	0
புத்தகம் கொமுதல் பற்று ...	1080	4	0
கைமாத்துப் பற்று காரியதரிசி சொ. சுப. பற்று ரூ. 300 கட்டா ந. ராம. ந. வரவு ரூ 26	274	0	0
முன் கணக்குப் பற்று பழைய கணக்கு வசம் ரூ. 74219—1—6 இவ்வருஷ அதிகப் பற்று ரூ. 4157—13—6 விசேஷ நிதிக்கணக்கில் வரவானது ரூ. 2881—11—6	81258	10	6
குறிப்பு இருப்பு	280	7	6
ஆக ரூபாய் ...	86918	7	0

கணக்குகளையும் வவுச்சர்களையும் தணிக்கை செய்தோம். அவைகள் சரியாக வைக்கப்பெற்றிருக்கின்றன.
1953 ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 25உ.

பெரி. அழ. மு. நடராஜன் செட்டியார்
கௌரவ காரியதரிசி.

கன. மெ. நா. சொக்கலிங்கம் செட்டியார்
சுப. க. அ. ராம. அண்ணாமலை செட்டியார்
கணக்குப் பரிசோதகர்கள்.

ரஸிக ரஞ்சனி பிரஸ், இரங்கூன்.